வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 25.12.2023 திங்கட்கிழமை | இதழ் : 359 | பக்கங்கள் : 12

# தீர்வு முயற்சியிலிருந்து இந்தியாவை பூரணமாக அகற்றுவதற்கு பெரும் சதி!



## விக்னேஸ்வரன் எம்.பி. முன்னெச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிசெம்பர் 25

புதிய அரசியலமைப்பின் ஊடாக 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நீக்குவதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழர்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் தொடர்ச்சியாக தலையீடு செய்துவரும் இந்தியாவை அவ்விடயத்திலிருந்து முழு மையாக களைவதற்கு பெரும் சதிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். 11



வாசகர்கள், முகவர்கள், விளம்பரதாரர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்

## நாளை சுனாமி என வதந்தி!

கொழும்பு, டிசெ. 25

நாளை செவ்வாய்க் கிழமை சுனாமி ஏற்படக் கூடும் என மக்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரவி வரும் தகவல் முற்றிலும் பொய்யானது என வளிமண்டலவியல் திணைக்களம் தெளிவுபடுத்தியுள்ளது.

சுனாமி அல்லது நில நடுக்கம் ஏற்படும் நேரத்தையோ திகதியையோ யாராலும் கணிக்க முடியாது என அந்த திணைக் களத்தின் பணிப்பாளர் 11

## 1,004 கைதிகளுக்கு மன்னிப்பு

கொழும்பு, டிசெ. 25

நத்தார் பண்டிகையை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதில் 989 ஆண்களும் 15 பெண்களும் அடங்குவர்.சிறைச்சாலை ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க இதனை அறிவித்தார்.

பல்லேகல சிறைச் சாலையில் இருந்து 162 பேரும், வெலிக்கடை 11

## கொரோனா அச்சம் வடக்கில் இல்லை!

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிசெ. 25

வடக்கில் கொரோனா அச்சம் இல்லை எனவும் , ஆனால் டெங்கின் தாக்கம் அதிகரித்து செல்வதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், டெங்கு தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 11

## புதிய எதிர்பார்ப்புக்களை தோற்றுவிக்கும் திருநாளாக இம்முறை நத்தார் பண்டிகை

### ஜனாதிபதி ரணில் வாழ்த்து

கொழும்பு,டிசெ.25

எதிர்பார்ப்புக்களைப் புதுப்பிப்பதற்கான கடமை மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றி அனைவருக்கும் புதிய எதிர்பார்ப்புக்களை தோற்றுவிக்கும் திருநாளாக இம்முறை நத்தார் பண்டிகை அமைய பிரார்த்திப்போம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



பல்வேறு சவால்கள் நம் முன் நிற்கின்ற தருணத்தில், நாம் நத்தார் பண்டிகையைக் கொண்டாடுகின்றோம். 11

## டெங்கு நோயாளர்களுக்காக யாழ்.போதனாவில் 2 விடுதிகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்குள்ளான 114 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு தொற்று நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். 11

## யாழ். பல்கலை மாணவி மரணம்! மருந்து ஒவ்வாமையே காரணம்!!

யாழ்ப்பாணம், டிசெ. 25

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவருக்கு செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவி உயிரிழந்துள்ளார் என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்கும் குணரத்தினம் சுபீனா என்ற 25 வயதான மாணவி நேற்று 11

## ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க நான் தயார்!

அறிவித்தார் மைத்திரிபால

கொழும்பு, டிசெ. 25

கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்தால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தான் தயாராக உள்ளதாக சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்- நாடு வங்குரோத்தடைந்தமைக்கு யார் 11

## ஜனவரி முதல் பெற்றோலுக்கு வரி!

கொழும்பு, டிசெ. 25

பெற்றோலுக்கான பெறுமதி சேர் வரி 10.5 வீதத்தினால் அதிகரிக்கும் என ஜனாதிபதி செயலகத்தின் அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே.கே.ஐ. எரந்த தெரிவித்துள்ளார்.

பெற்றோலுக்கு இது வரையில் அறவீடு செய்யப்பட்டு வந்த 7.5 வீத துறைமுக மற்றும் விமான நிலைய வரி ஜனவரி மாதம் முதல் நீக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் குறித்து தொழிற் சங்கங்களை தெளிவுபடுத்தும் நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பெறுமதி சேர் வரி 18 வீதம் அறவீடு செய்யப்பட உள்ளதுடன், பெற்றோலுக்கு 10.5 வீத வரி அறவீடு செய்யப்படும் எனவும் எரந்த குறிப்பிட்டார்.

இதேவேளை, பெற்றோல் டீசலுக்கான பெறுமதி சேர் வரி குறித்து ஆராய்ந்து வருவதாக மின்வலு எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(அ)

## யாழ். சிறைச்சாலையில் மோதல் கைதி ஒருவர் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இரண்டு கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த கைதியொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில், இரண்டு கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி, மோதலில் ஈடுபட்டனர். 11

## இப்படியும் நடக்கிறது

'இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான ஏற்றுக்கொள்ளத்தக்க இறுதித்தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை என்ற உண்மையை இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டுசென்று, அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு அவசியமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய தூதுவர் சந்தோஷ் ஜாவிடம் கோரியுள்ளார்.'

மேலே இருக்கின்ற செய்தி நேற்றைய ஈழநாடுவின் தலைப்பு செய்தி.

இதனைப் படித்ததும் இந்த ஊர்க்குருவிக்கு சிறிது குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

சில மாதங்களுக்கு முன்னர், ரெலோவின் ஏற்பாட்டில் இந்தியப் பிரதமருக்கு நேரடியாக கோரிக்கை விடுத்து கடிதம் எழுதியதும் அந்தக் கடித்தில் சம்பந்தன் ஐயா கையொப்பம் வைப்பதற்கு நடந்த இழுபறிகளும் இந்தப் பத்தியில் பல தடவைகள் எழுதிய சங்கதிகள் தான்.

ஆனால், அப்படி அவர்கள் அனைவரும் கையொப்பமிட்டு விடுத்த கோரிக்கையும் இதனைத்தான் வலியுறுத்தியது. அந்தக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்தபோது, அதற்கு எதிராக 'பொங்கி எழுந்தவர்' நமது கஜேந்திரகுமார்.

கூட்டமைப்பினர் (அப்போது தமிழரசும் கூட்டமைப்பில்தான் இருந்தது) ஒற்றையாட்சிக்குள் தமிழர்களை முடக்கப்பார்க்கின்றனர் என்று கூறியவர் இவர். அது மாத்திரமன்றி, பதின்மூன்றுக்கு எதிராக வடக்கில் பெரும் பேரணி ஒன்றையும் நடத்தியவர். அவர்தான் இப்போது மேற்கண்டவாறு இந்தியத்தூதுவரிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார். அத்தோடு அவர் நின்று விடவில்லை:

'தமிழர் பிரச்னைக்கு நிலையான இறுதித்தீர்வொன்றைக் கண்டடைவதை முன்னிறுத்தியே இரு நாடுகளுக்கும் இடையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதில், இந்தியாவின் நலன்களும் தங்கியிருந்தன. இருப்பினும், அவ்வொப்பந்தத்தின் பிரகாரம் தமிழர்களுக்கான தீர்வு இன்னமும் வழங்கப்படவில்லை. எனவே, இந்த உண்மையை புதிய தூதுவர் சந்தோஷ் ஜா, இந்திய ஆட்சியாளர்களிடம் கொண்டு செல்லவேண்டும். அதனூடாக ஆகக்குறைந்தது தமிழர் பிரச்னைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்' என்றும் தெரிவித்திருக்கிறார்.

கவனிக்க: ஆகக்குறைந்தது தமிழர் பிரச்னைக்கு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டுமாம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்றால் என்ன என்று சுருக்கமாக சொல்வதானால் பின்வருமாறு சொல்லலாம் என்று நினைக்கின்றேன்.

'இந்திய இலங்கை ஒப்பந்தம், அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையே ஜூலை 29, 1987ம் ஆண்டு ஈழத்தமிழர்களின் பிரச்னைகளை தீர்க்கும் நோக்குடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் ஆகும்.

இந்த ஒப்பந்தம் இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி நாடாக ஏற்று- வட - கிழக்கை தமிழ், முஸ்லிம் மக்களின் இணைந்த தாயகப் பிரதேசமாக ஏற்று- தமிழ் மொழியை அரச மொழியாக ஏற்று - மாகாண சபைகளூடான அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைக்கின்றது.'

அத்தகைய ஒப்பந்தத்தை அமுல்படுத்த அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றுதான் நமது கஜேந்திரகுமார் இப்போது கூறியிருக்கிறார்.

தமிழர் பிரச்னைக்கு அதனைத் தீர்வாக ஏற்றுக்கொள்வதுதான் நமக்கு இருக்கக்கூடிய ஒரே சந்தர்ப்பம் என்பதைத்தான் இந்தப் பத்தியில் நீண்டகாலமாக தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அப்போதெல்லாம் அதனை மூர்க்கத்தனமாக எதிர்த்தவர்கள் இப்போது கீழிறங்கி வந்திருக்கிறர்களா? அல்லது யதார்த்தத்தை இப்போதுதான் உணர்ந்துகொண்டார்களா என்பது தெரியவில்லை. ஆனால், இது வரவேற்கப்பட வேண்டியதுதான்.

அண்மைக்காலமாக இந்தியா, தமிழர் விவகாரத்தில் அக்கறையின்றி இருப்பது போன்ற ஒரு தோற்றம் நிலவி வருவது பற்றி இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருக்கின்றோம். அதற்கு காரணம் தமிழர் தரப்பு தமக்கான தீர்வு என்ன? எதனை வலியுறுத்துகின்றது என்ற விடயத்தில் ஒருமித்த கருத்தை முன்வைக்க முடியாத நிலையில் இருந்ததுதான். கடைசியாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் தமிழர் தரப்பை ஒன்றாக சந்தித்த போதும், ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று வலியுறுத்தாதீர்கள் என்று கேட்டார் இந்த கஜேந்திரகுமார். ஆனால், மற்றையவர்கள் எல்லோரும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்த அழுத்தம் கொடுக்கக் கோரினார்கள். அவரும் இப்போது மற்றயைவர்கள் போல அதே கோரிக்கையை முன்வைக்கின்றபோது எல்லோருமாக ஒரே குரலில் ஒரே கோரிக்கையை முன்வைக்க சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பது நல்ல அறிகுறிதான்.

**- ஊர்க்குருவி.**

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு சிறுபான்மையினர் ஆதரவளிக்க வேண்டும்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ கேட்கிறார்

கொழும், டிசெ. 25

இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை உறுதிப்படுத்தி சிறந்ததோர் இலங்கையை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டே உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நிறுவப்படவுள்ளதாக நீதி சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



அத்துடன், இந்த முயற்சிக்கு அனைத்து தமிழ்த் தரப்புக்கள் உட்பட அனைத்து சிறுபான்மைத் தரப்பினரும் முழுமையான ஆதரவை வழங்குமாறு பகிரங்கமாக கோருவதாக தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் ஜனவரியில் ஆணைக்குழு குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான சட்டமூல வரைவு தயாரிப்பு மற்றும் அடுத்தகட்டச் செயல்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் எதிர்காலத்தை கருதி மிக முக்கியமான சட்ட வரைவொன்றை தயாரித்து வருகின்றோம். குறிப்பாக, இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி சக வாழ்வை உறுதிப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாக உள்ளது.

அதன் அடிப்படையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. அச்சட்டமூலத்துக்கான வரைவு எதிர்வரும் ஜனவரி மாதம் வர்த்தமானி ஊடாக வெளியிடப்படவுள்ளது.

அதன் அடிப்படையில் சட்டமூலம் தொடர்பில் அனைத்து தரப்பினரது கருத்துக்களையும் கேட்டறிந்து அவசியம் ஏற்பட்டால் திருத்தங்களை மேற்கொண்டு, அதற்கு பாராளுமன்ற அங்கீகாரம் பெறப்படவுள்ளது. இந்தச் செயற்பாடானது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இனங்களுக்கு இடையில் நீடித்துக்கொண்டிருக்கும் முரண்பாடுகளை களைவதற்கு ஏற்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றாகவே பார்க்கின்றேன். விசேடமாக எதிர்கால சந்ததியினர் உள்நாட்டில் தமது எதிர்காலம் தொடர்பில் சந்தேகங்களை கொண்டிருக்கின்ற தற்போதைய சூழலில் மிகவும் முக்கியமானதொரு பணி முன்னெடுக்கப்படுகிறது.

ஆகவே, இந்தச் செயல்பாட்டுக்கு விசேடமாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அதுமட்டுமன்றி, முஸ்லிம், மலையக கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில், இதுகால வரையிலும் எந்தவோர் ஆட்சியாளரை பாதுகாக்கின்ற வகையிலோ அல்லது இனக்குழுமத்தை, தனிநபர்களை இலக்குவைத்து சட்ட வரைவுகளைச் செய்ததில்லை. எதிர்காலத்திலும் அதனைச் செய்யப்போவதில்லை.

ஆகவே, வர்த்தமானி அறிவித்தலின் பின்னர், அனைத்து தரப்பினரும் தமது கருத்துக்களை வெளியிட முடியும். அவற்றை ஆராய்ந்து சட்டமூலத்தின் தேவை ஏற்பட்டால் திருத்தங்களை மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு தயாராகவே உள்ளேன்.

அதுமட்டுமன்றி, கடந்த 21ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது இந்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. அச்சமயத்தில் நேர்மறையான பிரதிபலிப்புகளே கிடைத்துள்ளன. யாரும் எதிர்த்திருக்கவில்லை.

ஆகவே, தொடர்ச்சியான காலத்தில் இந்த விடயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அனைத்து தரப்பினரும் பங்கேற்புடன் ஒத்துழைப்புக்களை வழங்கி ஆதரவளிக்க வேண்டும் என்று பகிரங்கமாக கேட்டுக்கொள்கின்றேன்- என்றார்.

(ஐ)

# ஆறுமுக நாவலர் குருபூசை இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 25

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக சிவசிறீ. பால. திருகுணானந்த குருக்கள் நடத்தும் வாராந்த பெரிய புராண சிறப்பு சொற்பொழிவும் மாதாந்த நாயன்மார் குருபூசையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய மண்டபத்தில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதில், நல்லூர் ஆறுமுக நாவலரின் 144ஆவது குருபூசையை தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறும். இதையடுத்து, சைவப்புலவர் பொன். சந்திரவேல் "கலியுகத்தில் நமக்கு வழிகாட்டிய ஆவதாரம் ஆறுமுகநாவலர் பெருமான்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவு நிறைவில் மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

(ஐ)

# தேநீர் அருந்திய வங்கி ஊழியர் திடீரென விழுந்து உயிரிழப்பு!

## கொடிகாமத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

இலங்கை வங்கி உத்தியோகத்தர் ஒருவர் தேநீர் அருந்திய நிலையில், திடீரென உயிரிழந்த சம்பவம் வடமராட்சியில் நிகழ்ந்துள்ளது.

தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த 41 வயதுடைய வங்கி உத்தியோகத்தரே உயிரிழந்தவராவார்.

ஒட்டுசுட்டான் இலங்கை வங்கிக் கிளையில் நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் அவர், கொடிகாமம் பகுதியில் தேநீர் அருந்திக்கொண்டிருந்தார். அப்போது, திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டு முச்சக்கரவண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லும் போது அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரியால் நேற்று மேற்கொள்ளப்பட்டது.

(ஐ)

# மூதாட்டியின் வீட்டின்மீது பெற்றோல் குண்டுவீச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணத்தில் தனிமையில் வசித்துவரும் மூதாட்டியின் வீட்டுக்கு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் உள்ள வீடொன்றில் மூதாட்டி ஒருவர் தனிமையில் வசித்து வருகிறார்.

அவரது வீட்டுக்குச் சென்ற சில சந்தேக நபர்கள் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ஐ-02)

ஈழநாடு
Eelanadu
25.12.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழரசு கட்சிக்கான புதிய தலைமை

இலங்கை தமிழரசு கட்சிக்கான புதிய தலைவரை தெரிவு செய்வதற்கு மும்முனை போட்டி நிலவுகின்றது. இது தொடர்பில் பொதுவெளிகளிலும் பலவாறான கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. தமிழரசு கட்சியின் கடந்த கால செயல்பாடுகளை விமர்சித்தவர்கள்கூட தலைமைத்துவ போட்டியில் ஈடுபாடு காட்டுவதை காண முடிகின்றது.

இதிலிருந்து ஒன்று தெளிவாகின்றது – அதாவது, தமிழரசு கட்சிதான் ஒரு பிரதான கட்சி என்பதை பலரும் ஏற்றுக்கொள்கின்றனர் – இல்லாவிட்டால், இந்தளவு ஆர்வம் காண்பிக்கப்பட வேண்டியதில்லை ஏனெனில், இது ஒரு கட்சியின் உள் விவகாரம். யார் தங்களின் புதிய தலைவர் என்பதை அந்தக் கட்சியின் உறுப்பினர்களே தீர்மானிப்பர். இதில் வெளியிலிருப்பவர்கள் முட்டி மோத வேண்டிய தேவையில்லை. இவ்வாறானதொரு சூழலில், தமிழரசு கட்சிக்கான தலைமைத்துவ போட்டியை கைவிட்டு – ஒரு கூட்டுத் தலைமையை ஏற்படுத்த வேண்டும் என்றவாறான கோரிக்கையொன்றும்கூட தற்போது தலைவராக இருக்கின்ற மாவை சேனாதிராசாவிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

ஓர் அரசியல் கட்சிக்கு எங்குமே கூட்டுத் தலைமை இருப்பதில்லை. வேண்டுமானால், பல கட்சிகளின் கூட்டுக்கு அவ்வாறான தலைமை தொடர்பில் சிந்திக்க முடியும். ஒரு கட்சி கூட்டுத் தலைமை தொடர்பில் சிந்தித்தால், அதன் பொருள் – அந்தக் கட்சியில் தலைமை தாங்குவதற்கான தகுதிநிலையில் எவருமே இல்லை என்பதுதான். அதேபோன்று, ஒரு கட்சிக்கு இணைத் தலைமை என்பதும் சாத்தியமற்ற ஒன்று. ஒருவேளை கட்சிக்குள் நிலவும் போட்டியானது – கட்சியை உடைத்துவிடலாம் என்று அந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் உணர்ந்தால் அவ்வாறானதொரு பரிந்துரைக்கு செல்லலாம். ஒருவேளை அப்படியானதொரு தீர்மானத்துக்கு தமிழரசு கட்சியினர் சென்றாலும்கூட, அது அவர்களின் பலவீனத்தையே வெளிக்காட்டும்.

தமிழரசு கட்சியை பொறுத்தவரையில், தற்போதுள்ள தமிழ்த் தேசிய கட்சிகள் மத்தியில் வடக்கு – கிழக்கு தழுவிய வகையில் வாக்குவங்கியை கொண்டிருக்கும் ஒரேயொரு கட்சியாகும். அதேவேளை, ஒப்பீட்டடிப்படையில், வடக்கு – கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் கட்சி கட்டமைப்புகளை கொண்டிருக்கும் ஒரேயொரு கட்சியாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமை தொடர்பில் கரிசனைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஒப்பீட்டடிப்படையில் கட்சிக்குள் பிளவுகளும் முரண்பாடுகளும் அதிகரித்திருக்கின்ற நிலையில்தான், தலைமைத்துவத்துக்கு மும்முனை போட்டி ஏற்பட்டிருக்கின்றது. மும்முனை என்று கூறினாலும் அடிப்படையில் இருவருக்கான போட்டியாகவே காணப்படுகின்றது. தமிழரசு கட்சிக்கான தலைவர் மாறுவதால், தமிழ்த் தேசிய அரசியலில் எந்தவோர் அதிசயமும் நிகழ்ந்துவிடப் போவதில்லை. தமிழ் தேசிய அரசியலை பொறுத்தவரையில் எந்தவொரு தனிநபரும் தமிழ் மக்களின் அரசியல் தலையெழுத்தை மாற்றி எழுதிவிட முடியாது.

ஏனெனில் தமிழரசு கட்சியோ அல்லது வேறு எந்தவொரு கட்சியிலோ – எவர் தலைவராக இருப்பினும் பாராளுமன்ற வழிமுறையே அவர்களுக்கு முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவாகும். அதனைத் தவிர்த்து, ஜனநாயக எதிர்ப்பு அரசியலை உச்சளவில் முன்னெடுப்பதாயின், அதற்கான அரசியல் ஒழுக்கத்துடன் எந்தவொரு கட்சியும் இல்லை – நபர்களும் இல்லை. ஏனெனில், பாராளுமன்ற உறுப்புரிமையே அவர்களுக்கான அங்கீகாரமாகவும் அரசியல் முகமாகவும் இருக்கின்றது. பாராளுமன்ற அரசியலுடன் சமரசம் செய்துகொள்ளும் எந்தவொரு நபரும் அரச எதிர்ப்புப் போராட்டங்களில் முழுமையாக தங்களை ஈடுபடுத்தப் போவதில்லை – அது முடியாததும்கூட. அவ்வப்போது சில அறிக்கைகளை வெளியிடுதல் – இல்லாவிட்டால் ஒரு கடையடைப்புக்கான அழைப்பு – அதற்கும் அப்பால் என்றால் – பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வகையான நடவடிக்கை ஒன்றை செய்ய முடியும்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் அதிசயங்களை நிகழ்த்தப் போவதில்லை. ஆனால், புதிதாகப் பொறுப்புகளை ஏற்பவர் – தன்னை மற்றவர்களைவிடவும் தகுதியானவராகக் காண்பித்துக் கொள்ளும் நோக்கில் சில செயல்பாடுகளை முன்னெடுப்பதுண்டு. அந்த வகையில் புதிதாக தெரிவு செய்யப்படுபவர் அனைத்து கட்சிகளுடனும் ஐக்கியமாக செயல்படக்கூடிய கரிசனையும் ஈடுபாடும் கொண்டிருந்தால் அது சிறப்பானது. அதுதான் இப்போது மக்களுக்கும் தேவையானது.

# போதைப்பொருள் விற்பனையின் பெரும்மீன்கள் விரைவில் சிக்குவர்

## பதில் பொலிஸ் மா அதிபர்

*கொழும்பு, டிசெ. 25*

*நெத்தலிகள் போதைப் பொருளுடன் வீதிக்கு இறங்கும்போதே அவர்களை கைது செய்ய பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கின்றனர். அவர்களை அவ்வாறே விட்டுச் செல்ல முடியாதல்லவா? சிறிய மீன்களை பிடித்ததன் பின்னர், பெரும் மீன்களை இலகுவாக எம்மால் கண்டுபிடிக்க முடியும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை என பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது,*

*பெருமளவில் போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டன என்று கூறப்பட்ட போதிலும், நெத்தலிகளே கைது செய்யப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. அந்த கருத்தில் ஓர் உண்மையும் இருக்கிறது. நெத்தலிகள் போதைப் பொருளுடன் வீதிக்கு இறங்கும் போதே அவர்களை கைது செய்ய பொலிஸாரும் நடவடிக்கை எடுக்கின்றனர். அவர்களை அவ்வாறே விட்டுச் செல்ல முடியாதல்லவா? சிறிய மீன்களை பிடித்ததன் பின்னர், பெரும் மீன்களை இலகுவாக எம்மால் கண்டுபிடிக்க முடியும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.*

*போதைப்பொருள் பாவனையாளர்களும் போதைப் பொருள் வர்த்தகர்களும் இருவேறு தரப்பினர் அல்ல. கடந்த 17ஆம் திகதியின் பின்னரும் அதற்கு முன்னரும் உள்ள நிலைமையும் நான் அவதானித்தேன். குற்றங்கள் பெருமளவு குறைவடைந்துள்ளன. தற்போதைய சுற்றிவளைப்புகளை விஸ்தரிக்கும் பட்சத்தில் 6 மாதங்களில் குற்றங்களை 50 வீதமாக குறைக்க முடியும். நாம் கண்டறிந்துள்ள 1,091 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் முழு நாட்டிலும் இருக்கின்றனர். இவர்கள் காலையில் குற்றங்களை செய்துவிட்டு இரவில் போலி கடவுச்சீட்டு மூலம் வெளிநாடு செல்கிறார்கள். காலையில் கொலை செய்துவிட்டு இரவில் வெளிநாட்டுக்கு செல்லும் முறைமை ஜனவரியிலிருந்து மாற்றமடையும். ஜனவரி மாதம் அவர்கள் விமான நிலையத்தில் கைது செய்யப்படுவார்கள்.*

*மேலும், 31 பாதாள குழு உறுப்பினர்கள் சிறைச் சாலையில் இருந்து குற்றங்களை வழிநடத்துகின்றனர். இவர்களையும் கட்டுப்படுத்தும் வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாதாரண மக்களுக்கு எதிராகவோ அல்லது பொலிஸாருக்கு எதிராகவோ பாதாளக் குழு உறுப்பினர்கள் ஆயுதங்களை ஏந்தி செயல்படும்போது அவர்களுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தகுந்த பாடம் புகட்டப்படும் – என்றார்.* (ஐ)

# கூட்டணி குறித்து இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் சஜித்திடம்!

*கொழும்பு, டிசெ. 25*

*ஐக்கிய மக்கள் கூட்டணியை கட்டியெழுப்புவதற்கான எதிர்கால முன்னெடுப்புகளின் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் குறித்து செயல்குழு கூட்டத்தில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய கூட்டணியை கட்டியெழுப்பும் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், இறுதி முடிவெடுக்கும் அதிகாரத்தையும் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதற்கும் செயல்குழு ஏகமனதாக தீர்மானித்து அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.*


*ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டம் வெள்ளிக்கிழமை கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.*

*இதன் போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் ஏனைய தரப்புகளுடன் இணைந்து கூட்டணியை உருவாக்குவதற்கு கட்சித் தலைவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் இதுவரை நடந்த பணிகள் குறித்து பொதுச் செயலாளரால் செயல்குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது.*

*அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கில் முன்னிலையாகி குறித்த தீர்ப்பு கட்சிக்கு வெற்றியாக எடுப்பதற்கு செயல்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி பர்மான் காசிம் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாத்தினருக்கு பாராட்டு தெரிவிக்கும் பிரேரணையும் செயல் குழுவில் நிறைவேற்றப்பட்டது.*

*போதைப்பொருள் வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள குருநாகல் மாவட்ட அமைப்பாளர்களில் ஒருவராக பணியாற்றிய அமித பண்டாரவின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்தல், மாவட்ட அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்குதல் மற்றும் கட்சியில் இருந்து நீக்குதல் தொடர்பாக கட்சித் தலைவர் எடுத்த தீர்மானத்துக்கு செயற்குழு ஏகமனதாக அனுமதி வழங்கியது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிருப்தி உண்டாகும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**கடகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு இருக்கும். புது வேலை அமையும். அதிகாரப் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**சிம்மம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கன்னி**
புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உயர் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புத்துணர்ச்சி நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரம் தழைக்கும். உங்களின் திறமைகள் வெளிப்படும். நன்மை கிட்டும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**மகரம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும்.

**கும்பம்**
திட்டவட்டமாக செயல்பட்டு காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மீனம்**
திட்டவட்டமாக செயல்பட்டு காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

# எம். ஜி. ஆரின் 36ஆவது ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு!

சென்னை, டிசெ. 25

அ. தி. மு. கவின் நிறுவநரும், முன்னாள் முதல்வருமான எம். ஜி. ஆரின் 36ஆவது நினைவு நாளான நேற்று சென்னை மெரினா கடற் கரையில் உள்ள அவரது நினைவிடத்தில், அ. தி. மு. க. சார்பில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.



முன்னாள் முதல்வர் எம் ஜிஆரின் 36-வது நினைவுநாள் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, அதிமுக சார்பில் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து அ. தி. மு. கவின் மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியினர் மரியாதை செலுத்தினர்.

முன்னதாக, அதிமுக சார்பில் மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் எம். ஜி. ஆரின் சிலைக்கு கட்சியினர் மரியாதை செலுத்தினர். சென்னை மெரினா கடற்கரையில், முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி. உதயகுமார், ஜெயக்குமார், கே.பி.அன்பழகன், மோகன், வளர்மதி, கோகுலஇந்திரா, திண்டுக்கல் சீனிவாசன், அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் உள்ளிட்டபலர் எம்ஜிஆர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர். மேலும், எம்ஜிஆரின் நினைவு நாளையொட்டி, அ. தி. மு. க. சார்பில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. இதில் திரளான கட்சித் தொண்டர்கள் பங்கேற்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

முன்னதாக, அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது சமூகவலைதளப்பக்கத்தில், "நம் அ. தி. மு. க. எனும் வீரிய விருட்சத்தின் விலை மதிக்க முடியாத விதை, தமிழகத்தில் இல்லையென்ற சொல்லை இல்லாமல் ஆக்கிட அயராது பாடுபட்ட பாரத ரத்னா, ஏழை எளிய மக்களின் வலிகள் அறிந்து வளர்ச்சி திட்டங்கள் வகுத்த தன்னலமற்ற தனித்தலைவர்,சத்துணவு தந்திட்ட சரித்திர நாயகர், என்றும் கோடிக்கணக்கான தமிழக மக்கள் நெஞ்சங்களில் வாழும் மன்னாதிமன்னன் எம். ஜி. ஆர் அவர் வகுத்து தந்த பாதையின் வழிநடந்து, அவரின் நினைவு நாளில் அவர்தம் பெரும் புகழைப் போற்றுவோம்" என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# பொய்களை சொல்வதே தி. மு. கவுக்கு வாடிக்கை

## பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர்

கோவை, டிசெ. 25

"பொய் சொல்வது தி. மு. கவுக்கு கைவந்த கலை" என பா.ஜ.கவின் தமிழக தலைவர் அண்ணாமலை கோவையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

மேலும் அண்ணாமலை கூறியவை வருமாறு,

தமிழகத்துக்கு மத்திய அரசு நிதி வழங்க மறுப்பதாகவும், குறைவாக கொடுப்பதாகவும் தி. மு. க கூறி வருகிறது. அப்படி மத்திய அரசு பாகுபாடு பார்க்கவில்லை. எந்த மாநிலமாக இருந்தாலும் சேதத்தின்



அடிப்படையில் மத்திய அரசு நிதி வழங்கி வருகிறது. பா.ஜ., ஆட்சி நடக்கும் குஜராத்தில் 2021ல் ஏற்பட்ட புயல் பாதிப்புக்கு ரூ. 9 ஆயிரத்து 836 கோடி கேட்டார்கள் . மத்திய அரசு உடனடி நிவாரண நிதியாக ஆயிரம் கோடி கொடுத்தார்கள். அதன் பிறகு மிச்சம் ரூ 8 ஆயிரத்து 836 கோடி கொடுக்கவில்லை.

கோவிட் காலக்கட்டத்தில் குஜராத்துக்கு மொத்தமாக ரூ. 304 கோடி ரூபாயும், தமிழகத்துக்கு ரூ. 868 கோடி வழங்கப்பட்டது. இதே மாதிரி உதாரணங்கள், புள்ளிவிவரங்கள் சொல்லி கொண்டே போகலாம். தி. மு. கவுக்கு பொய் சொல்வது கைவந்த கலை. பொய் சொல்வதே அவர்களின் வாடிக்கை. தி. மு. கவின் பொய்யை தோலுரிக்க விரும்பவில்லை - என்றார்.

# தி. மு. கவுக்கு எதிரான வாக்குகள் அதிகரிக்கின்றன!

## ஜி. கே. வாசன் சொல்கிறார்

தர்மபுரி, டிசெ. 25

"தி. மு. ககவுக்கு எதிரான வாக்குகள் அதிகரித்து வருகின்றன. அதன் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றது" என நிருபர்கள் சந்திப்பில் த.மா.கா தலைவர் ஜி. கே. வாசன் தெரிவித்தார்.

இது குறித்து ஜி.கே.வாசன் கூறியதாவது:

கூட்டணி குறித்து எல்லா கட்சிகளும் இன்னும் ஒரு மாதத்துக்குப் பிறகுதான் அறிவிக்கும். கூட்டணி குறித்து கட்சிகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கும் போது தான் அது உண்மை நிலையாக இருக்க முடியும். அனைத்து எதிர்க் கட்சிகளுடன் நன்றாக பழகி கொண்டு இருக்கிறோம். தற்போது கட்சியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வியூகத்திற்காக கட்சியை வலுப்படுத்துவது அவசியம். த.மா.கா., இருக்கும் கூட்டணி முக்கியமானதாக இருக்கும். திமுகவுக்கு எதிரான ஓட்டுக்கள் அதிகரித்து வருகின்றன. அதன் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. அந்த வியூகத்தை முழுமையாக பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் வெற்றிப் பெறக்கூடிய நிலை ஏற்படும். அதிமுக, பா.ஜ., ஆகிய கட்சிகளுடன் நட்பாக இருக்கிறோம். தேர்தல் நேரத்தில் கூட்டணி குறித்து அறிவிக்கப்படும் - என்றார்.



ஈழநாடு



# பொலிஸாரின் நடவடிக்கையால் குற்றச்செயல்கள் குறைந்தன!

## யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்



யாழப்பாணம், டிசெ. 25

**யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக பொலிஸார் முன்னெடுத்து வரும் விசேட நடவடிக்கையால் வாள்வெட்டு, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்கள் சடுதியாக குறைந்துள்ளன என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விஷாந்த தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கடந்த சில தினங்களில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகளின்போது 100க்கும் அதிகமானவர்கள் கைதாகினர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் மேற்கொள்ளும் இந்த விசேட நடவடிக்கையினால் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வந்த வாள்வெட்டு, வன்முறைகள், திருட்டு, வழிப்பறி உள்ளிட்ட குற்றச்செயல்கள் சடுதியாக குறைந்துள்ளன. இந்த விசேட நடவடிக்கை எதிர்வரும் நாட்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (ஐ)

# மூச்சுத் திணறலால் பெண் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், டிசெ. 25

மூச்சுத்திணறல் காரணமாக ஆறு மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை ஒன்று யாழ்ப்பாணத்தில் உயிரிழந்தது.

திருநெல்வேலி, கலாசாலை வீதியைச் சேர்ந்த பெண் குழந் தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணிக்கு குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

இதனால் பெற்றோர் குழந்தையை இரவு 12 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் அதிகாலை வேளையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டுள்ளதோடு, உடற் கூற்று பரிசோதனைகளின் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)



# 50 அடி உயர கிறிஸ்மஸ் மரம் முல்லையில் திறந்துவைப்பு

முல்லைத்தீவு, டிசெ. 25

முல்லைத்தீவு - உடையார் கட்டில் 50 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம் மக்கள் பார்வைக்காக நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் அருட்தந்தையர்கள், துறவிகள், பொது மக்கள் என பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர்.

வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட 50 அடி உயரம் கொண்ட கிறிஸ்மஸ் மரத்தை ஒவ்வொருநாளும் மாலை 6.00 மணிக்கு பின்னர் மக்கள் சென்று பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

# வெளிநாடு அனுப்புவதாக மோசடி; இளைஞர்கள் இருவருக்கு மறியல்!

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபரை வெளிநாடு அனுப்புவதாக கூறி மோசடி செய்த நபரை கடத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் இருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 53 வயதான நபர் ஒருவர் கடத்தப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில், இரு இளைஞர்களை கைது செய்ததுடன், கடத்தப்பட்டதாக கூறப்பட்ட நபரையும் மீட்டு இருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது, வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி தம்மிடம் பணத்தை வாங்கி ஏமாற்றி வந்தமையால், அவரிடம் இருந்து பணத்தை பெற்றுக்கொள்ளவே தாம் அவ்வாறு நடந்து கொண்டதாக தெரிவித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து , கைது செய்யப்பட்ட இரு நபர்களையும், யாழ் .நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியதை அடுத்து, இரு இளைஞர்களையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

# நீர்தொட்டியில் கசிப்பு காய்ச்சியவர் தருமபுரம் பொலிஸில் சிக்கினார்!

கிளிநொச்சி, டிசெ. 25

தண்ணீர் தொட்டியில் கசிப்பு காய்ச்சிய நபரை தருமபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர். கிளிநொச்சி - தருமபுரம் - விசுவமடு- கொழுந்துபுலவில் கசிப்பு உற்பத்தி நடப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து, பொலிஸார் அப்பகுதியை நேற்று சோதனையிட்டனர். இதன்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கைதான சந்தேக நபர் வீட்டின் பின்புறமாக உள்ள தண்ணீர் தொட்டியை பயன்படுத்தி தொட்டியின் பின்புறமாக தனியாக மறைவான இடம் ஒன்றை ஏற்படுத்தி கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 712 போத்தல் கோடாவும் 34

# வீட்டில் தூசு தட்டிய முதியவர் தவறி விழுந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 25

வீட்டு சுவரில் ஏறிநின்று தூசு தட்டிய முதியவர் தவறி கீழே விழுந்து உயிரிழந்தார்.

அராலி வடக்கு பகுதியைச் சேர்ந்த வடிவேலு பரமகுலதேவராசா (வயது 75) என்பவரே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வீட்டின் உள்ளே சுவரில் ஏறி நின்று தூசு தட்டியுள்ளார். அப்போது தவறி கீழே விழுந்துள்ளார்.

அவரை மீட்ட வீட்டார் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும், அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

# 46 ஏக்கர் நெல் செய்கை யாழ்ப்பாணத்தில் அழிவு

யாழ்ப்பாணம்,டிசெ. 25

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக சுமார் 46 ஏக்கர் நெல் செய்கை அழிவடைந்துள்ளது என்று யாழ். மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி. கயிலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 7.04 ஏக்கர், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 3.325 ஏக்கர், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 18.75 ஏக்கர், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 17 ஏக்கர் நெல் பயிர்களும் அழிவடைந்தன.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் 9.125 ஏக்கர் மரக்கறி பயிர் செய்கையும் அழிவடைந்துள்ளது. இதில் அதிகபட்சமாக சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 8.875 ஏக்கர் மரக்கறி பயிர் செய்கை அழிவடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஹெரோயினுடன் சுன்னாகத்தில் ஒருவர் கைது!

யாழப்பாணம், டிசெ. 25

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடி பகுதியில் வைத்து ஹெரோயினுடன் 34 வயது சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கைதின்போது இளைஞரிடம் இருந்து 8 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

பொலிஸாரை கண்டதும் சந்தேக நபர் தப்பி ஓட முயன்றவேளையிலேயே சுன்னாகம் பொலிஸார் அந்நபரை மடக்கிப் பிடித்து கைது செய்துள்ளனர்.

இதனையடுத்து, மேலதிக விசாரணைகளின் பின்னர், கைதானவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாடுகள் திருட்டுடன் தொடர்புடையவர் கைது

வவுனியா, டிசெ. 23

வவுனியா சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக மாடுகள் திருடப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 3 நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் வாகனமொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவில் மாடுகளை திருடி வாகனத்தில் ஏற்றி கடத்தும் குழு தொடர்பில் பொலிஸாக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த நடவடிக்ககை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் மூன்று மாடுகளும் வாகனமும் கைப்பற்றப்பட்டிருந்தது. ஐ)

# போதைப் பொருள் பயன்பாட்டுக்கு ஜூன் மாதத்துக்குள் முற்றுப்புள்ளி

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, டிசெ. 25

**போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பாதாள உலகத்தினரின் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு எதிர்வரும் ஜுன் மாதத்துக்குள் முழுமையாக முற்றுப்புள்ளி வைப்பதை இலக்காக கொண்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், இந்தச் சவாலான பயணத்தில் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பதாகவும் குறிப்பிட்டார். யுக்திய போதைப்பொருள் சுற்றிவளைப்புகள் மற்றும் பாதாள உலக குழுவினருக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஆக்கிரமித்துள்ள போதைப்பொருள் வர்த்தகம், பாவனை மற்றும் பாதாள உலகக்குழுவினர் ஆகியோருக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸார் உள்ளிட்ட பொதுமக்கள் பாதுகாப்புத் துறையினர் 24மணிநேரமும் விழிப்புடன் தீவிரமான செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் செயல்பாட்டுக்கு பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் முழுமையான ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும். ஆவ்வாறான ஒத்துழைப்புகள் வழங்கப்படுவதன் மூலமாக போதைப் பொருளற்ற சமூகத்தைக் கொண்ட நாடொன்றை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

இந்தச் செயல்திட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முழுமையான ஆதரவை அளித்துள்ளார். அத்துடன், பாதுகாப்பு படையினரும் பாரியளவில் ஒத்துழைப்புகளை வழங்குகின்றார்கள். விசேடமாக கடல்மார்க்கமாக கொண்டுவரப்படுகின்ற போதைப்பொருள் கடத்தல்களை தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகளை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் போதைப்பொருள் கடத்தல்கள், விநியோகம், பாவனை உள்ளிட்டவற்றுடன் தொடர்புடையவர்கள் மீதும் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடும் பாதாள உலகக்குழுவினர் மீதும் எந்தவிதமான தயவுமின்றி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதில் மாற்றமில்லை - என்றார். (ஐ)

# போதைப்பொருள் கடத்த முயன்ற இலங்கையர் தமிழகத்தில் கைது!

சென்னை, டிசெ. 25

போதைப்பொருளை இலங்கைக்கு கடத்த முயன்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கை பிரஜை உட்பட இருவரை இந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் சென்னை வலய பிரிவினர் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து 56 கிலோ போதைப்பொருளை பொலிஸார் கைப்ற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இலங்கையை சேர்ந்த உதயகுமார் மற்றும் பெரம்பூரை சேர்ந்த அக்பர் அலி எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சென்னையில் தங்கியிருந்த உதயகுமாரை கடந்த 10ஆம் திகதி, போதைப்பொருள் கடத்த முயன்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்து, அவரிடமிருந்த 2 கிலோ போதைப்பொருளையும் கைப்பற்றினர்.

அதன் பின்னரான விசாரணைகளில் போதைப்பொருள் விநியோகத்தரான அக்பர் அலியை கைது செய்து அவரிடமிருந்து 54 கிலோ போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# தொலைபேசி தரவு மூலம் கொலையாளி சிக்கினார்!

கொழும்பு, டிசெ. 25

தொலைபேசி தரவுகளை ஆய்வு செய்து கொலை சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த நவம்பர் 28 ஆம் திகதி வத்தளை -ஹெலகந்த பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய வத்தளை பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

தொலைபேசி தரவு ஆய்வு அறிக்கையின் மூலம் சந்தேக நபர் தொடர்பான தகவலை உறுதிப்படுத்திய பின்னர், அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் கொழும்பு 15 பிரதேசத்தை சேர்ந்த 29 வயதான நபர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பரிசோதித்த போது, அவரிடம் இருந்து 4.15 கிராம் ஹெரோயின் போதைப் பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் இனவாதிகள் வேண்டாம்!

## கூட்டணி கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 25

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியில் இனவாதிகளை இணைத்துக்கொள்ள வேண்டாம் என்று அக்கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன வலியுறுத்தியுள்ளன.

புதிய கூட்டணியை அமைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது தீவிராக இடம்பெற்று வருகின்றன. இதில் டலஸ் அணி உறுப்பினர்களும் இணையவுள்ளனர். இதில் சிலருக்கு பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இந்நிலையிலேயே இனவாதம் கக்குபவர்களுக்கும், கடும்போக்குவாதிகளுக்கும் இடமளிக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணி, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

“ராஜபக்ஷ அரசின் வீழ்ச்சிக்கு இனவாதிகளே காரணம். தற்போது ராஜபக்ஷர்கள் சுயாதீனமாக இருந்தாலும் அவர்களை இணைத்துக்கொண்டால் அது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கும்“ - என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ஐ)

# 2024 நடைபெறும் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கே வெற்றி!

## ஜனாதிபதியிடம் புலனாய்வு அறிக்கையாம்

கொழும்பு, டிசெ. 25

எதிர்வரும் 2024ஆம் ஆண்டு நடத்தப்படும் எந்த தேசிய தேர்தலாக இருந்தாலும் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியைப் பெறும் என விசேட புலனாய்வு அறிக்கை மூலம் ஜனாதிபதியிடம் விரிவான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஒன்றரை வருட காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரபலம் அதிகரித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலைமை தொடர்ந்தால், அடுத்து நடைபெறும் தேர்தல்களில் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பான விபரமான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் கிராமங்களில் இதற்கு முன்னர் ஏனைய பிரதான கட்சிகளுக்கு ஆதரவளித்து வந்த பலர் தற்போது தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளதாக புலனாய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகவும் தென்னிலங்கை ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# அமைச்சர் டிரானின் குண்டர் செயல்களுக்கு கத்தோலிக்க திருச்சபை ஒருபோதும் அஞ்சாது

## பேராயரின் இல்லம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் குண்டர் செயல்பாடுகளுக்கு நாம் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. அருட்தந்தை சிறில் காமினி தொடர்புடைய விபத்து குறித்து பேராயருக்கு நெருங்கிய ஒருவர் அவருடன் தொலைபேசியில் உரையாடியாடினார் என்று அவர் தெரிவித்தமை முற்றிலும் பொய்யாகும் என்று பேராயர் இல்லத்தின் மக்கள் தொடர்பு ஒருங்கிணைப்பு பிரிவின் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி ஊடக மையத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் மாநாட்டில் அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்த கருத்துகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அருட்தந்தை சிறில் காமினியால் இடம்பெற்ற விபத்தின் போது, பதில் பொலிஸ்மா அதிபருடன் தொலைபேசியில் உரையாடியதாகவும், பிணை வழங்கியமைக்காக நன்றி தெரிவித்ததாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்திருக்கின்றார். அது முற்றிலும் பொய்யானதொரு விடயமாகும்.

விபத்து இடம்பெற்று அருட்தந்தை சிறில் காமினி பொலிஸாரால் விடுவிக்கப்பட்ட மறுநாளே தான் இந்த சம்பவம் தொடர்பில் தெரிந்து கொண்டதாக பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மிகவும் பொறுப்புடன் தெரிவித்துள்ளார். அரசாங்கத்திடமோ அல்லது பொலிஸாரிடமோ தனது பெயரைக் கூறி சிறப்புரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியளவு நெருக்கமானவர்கள் எவரும் தனக்கு அருகில் இல்லை என்றும், அவ்வாறு எவரும் செயற்பட்டிருப்பார்களானால், அது தனக்கு பெரும் ஆச்சரியம் அளிப்பதாகவும் பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அமைச்சரால் பேராயரை தொடர்புபடுத்தி கூறப்பட்ட விடயங்கள் முற்றிலும் பொய்யானவை என்பதை நாம் பொறுப்புடன் கூறிக் கொள்கின்றோம். அத்தோடு அருட்தந்தை சிறில் காமினியும் இவ்வாறு ஒருவர் பதில் பொலிஸ்மா அதிபரிடம் பேசிய விடயத்தை அறிந்திருக்கவில்லை. எனவே இவ்வாறு அப்பட்டமான பொய்களைக் கூற வேண்டாம் என்று அமைச்சர் டிரான் அலஸிடம் கேட்டுக்கொள்வதோடு, மாறாக அமைச்சர் கூறுவது உண்மையெனில், அதனை சாட்சியங்களுடன் நிரூபிக்குமாறும் சவால் விடுக்கின்றோம்.

அமைச்சர் டிரான் அலஸின் செயற்பாடுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். இவர் அண்மைய நாட்களாக கத்தோலிக்க சபைக்கும், பேராயர் மீதும் அவதூறுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றமை கவலைக்குரியதாகும். இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளுமாறு அமைச்சரை வலியுறுத்துகின்றோம். இவ்வாறு கத்தோலிக்க சபை மற்றும் பேராயர் மீது அவதூறு பரப்பும் செயற்பாடுகளானது மதங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிப்பதாகவும், மதத்தை நிந்திப்பதாகவும் உள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் அவரை சாபத்துக்குள்ளாக்கும். அரசாங்கத்தின் பிரதான அமைச்சரான டிரான் அலஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஒப்பந்தத்தை செயல்படுத்துகின்றாரா என்ற சந்தேகம் நிலவுகிறது. அமைச்சர் டிரான் அலஸ் அவரின் குண்டர் செயல்பாட்டை வேறு நபர்களிடம் காண்பிக்கலாம். ஆனால், கத்தோலிக்க சபையைச் சேர்ந்த நாம் அதற்கு ஒருபோதும் அஞ்சப் போவதில்லை - என்றார்.

(ஐ)

# கொரோனா நாட்டுக்குள் வருவதை தடுக்க நடவடிக்கைகள் அவசியமானவை!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, டிசெ. 25

**உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றின் மாறுபாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றின் மாறுபாடு நாட்டுக்குள் நுழைவதைத் தடுப்பதற்கு விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் பாதுகாப்பு ஆய்வு நடவடிக்கைகளை அரசாங்கம் பலப்படுத்தவேண்டும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு குறித்து இலங்கையில் இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்புகள் விடுக்கப்படாத நிலையில், சுகாதார அமைச்சின் நிபுணர் குழுவொன்று ஒன்றுகூடி உலக நிலைமைகளை கவனத்திற் கொண்டு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்க வேண்டுமென சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதனிடையே, கொரோனா வைரஸின் மாறுபாடு தொடர்பில் பொது மக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த வேண்டாமென தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சுவாசநோய் தற்போது அதிகளவில் பதிவாகி வரும் நிலையில், கர்ப்பிணித் தாய்மார்கள், நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்ட வர்கள், முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் அவதானமாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பு!

கொழும்பு, டிசெ. 25

இன்று கிறிஸ்மஸ் தினமாகும். இதையொட்டி, தேவாலயங்களுக்கு விசேட பாதுகாப்பை வழங்குவதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தற்போதைய பாதுகாப்பு போதுமானதாக இல்லாவிட்டால், பொலிஸ் தலைமையகத்துக்கு அறிவிக்க முடியும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரச்னைகள் உள்ள தேவாலயங்கள் 011-2472757 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு தகவல்களை வழங்க



முடியும்.

மக்கள் அதிகம் வரும் தேவாலயங்களின் பாதுகாப்பை பலப்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சில தேவாலயங்களுக்கு பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவ பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜனாதிபதி தேர்தலில் வெற்றிக்கான வாக்கு உறுதியானதும் உத்தியோகபூர்வ அறிவிப்பு

## தம்மிக பெரேரா சொல்கிறார்

கொழும்பு, டிசெ. 25

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கு தேவையான 51 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை உறுதியானதும் எனது உத்தியோகபூர்வமான அறிவிப்பு வெளியாகும் என்று பிரபல வர்த்தகர் தம்மிக பெரேரா ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தம்மிக பெரேரா உட்பட நால்வரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன என்று அக்கட்சின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், பொதுஜன பெரமுனவின் சார்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு தயாராகின்றீர்களா என்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகவே உள்ளேன். எனது பெயரை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாக அக் கட்சியின் செயலாளர் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அவ்வாறான நிலையில், நான் இன்னமும் உத்தியோகபூர்வமான முடிவை எடுக்கவோ, அறிவிக்கவோ இல்லை. எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தேவையான 51சதவீதமான வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைமைகள் உருவாகின்றபோது நான் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக களமிறங்கும் முடிவினை உத்தியோகபூர்வமான அறிவிப்பை செய்வேன் - என்றார்.

# பண மோசடியில் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் கைதானார்

கொழும்பு, டிசெ. 25

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி, பல்வேறு பிரதேசங்களில் மக்களை ஏமாற்றி ஒரு கோடி ரூபாய்க்கும் மேல் பண மோசடி செய்ததாகக் கூறப்படும் உடுநுவர உள்ளூராட்சி சபையின் (ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு) முன்னாள் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பேராதனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் தொழில் தருவதாக கூறி 3 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை பணம் பெற்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவர் தொடர்பில் பேராதனை பொலிஸாருக்கு கிடைத்த 8 முறைப்பாடுகளின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# ஜனாதிபதி சட்டத்தரணியாக 10 பேருக்கு நியமனங்கள்!

கொழும்பு, டிசெ. 25

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரட்ண உட்பட 10 மூத்த சட்டத்தரணிகள் ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமனம் வழங்கப்பட்ட நிலையில் உயர் நீதிமன்றத்தின் சம்பிரதாய அமர்வை தொடர்ந்து பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

அதனடிப்படையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவட்ண மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகளான சமந்த வீரகோன், கலாநிதி அசங்க குணவன்ச, மொஹமட் அடமலி, ஹர்ஷ பெர்னாண்டோ , கலாநிதி சிவாஜி பீலிக்ஸ்பைசாமார்க்கர், உபுல் குமாரப்பெரும, விரன் கொரியா மற்றும் எராஜ் டி சில்வா ஆகியோரே ஜனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# நாட்டை மீட்டெடுக்க ஆட்சியாளர்கள் அர்ப்பணிப்புகளை செய்யவில்லை

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, டிசெ. 25

அப்பாவிகளான சிறிய மனிதர்களின் அனைத்தையும் பிடுங்கி சாப்பிடும் ஆட்சியாளர்கள், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க எந்த அர்ப்பணிகளையும் செய்யவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்பாவிகளான சிறிய மனிதர்களின் அனைத்தையும் பிடுங்கி சாப்பிடும் ஆட்சியா



ளர்கள், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க எந்த அர்ப்பணிகளையும் செய்யவில்லை. அடகு கடைகளுக்கு முன்னால் வரிசையில் நிற்கும் மக்களின் கைகளை பாருங்கள் என்று ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுகின்றேன்.

குழந்தைகளின் காதணிகள், சங்கிலிகள் போன்றவைகூட அவர்களின் கைகளில் இருக்கின்றன. வீட்டில் இருக்கும் பீங்கான், கோப்பை, சட்டி, பாணைகளைக்கூட அடகு வைக்கும் நிலைமைக்கு சென்ற பின்னரே அரசாங்கத்தின் பயணம் முடிவுக்கு வரும்

வரிசுமை அதிகரிப்பு, பொருட்களின் விலையேற்றம், வருமான இழப்பு, மின்சார கட்டண உயர்வு உட்பட பல காரணங்களால் மக்கள் பொருளாதார ரீதியில் கடும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர் - என்றும் கூறினார். (ஐ)

# அதிவேக நெடுஞ்சாலை பணிகளிலிருந்து அதிரடி படையினரை நீக்குவதற்கு கவனம்!

கொழும்பு, டிசெ. 25

நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள விசேட அதிரடிப் படையினரின் பணிகள் மற்றும் அது குறித்த பிரச்னைகள் தொடர்பிலும், அவர்களை அந்தப் பணிகளில் இருந்து நீக்குவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் மூத்த ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த விசேட கலந்துரையாடலொன்றில் இதுகுறித்து ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கும், அதன்போது செயல்படவும் குற்றங்களை தடுப்பதற்கும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர். அந்த பணிகளிலிருந்து விசேட அதிரடிப் படையினரை நீக்கி, அந்த பணிகளை முன்னெடுப்பதற்கான மாற்றுவழி தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

இதற்காக முன்வைக்கப்பட்ட பல்வேறு யோசனைகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், இந்த பணிகளைப் பொறுப்புடன், உரிய வகையில் முன்னெடுப்பதற்கும், இதனை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முகாமைத்துவம் செய்யக்கூடியதுமான சரியான வேலைத்திட்டம் ஒன்றை பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் விரைவில் உருவாக்குமாறு சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

# கொலையின் பின் வீசப்பட்ட சடலம் சந்தேகத்தில் இருவர் கைதாகினர்

இறக்காமம், டிசெ. 25

**அம்பாறை - இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாங்காமம் பகுதியிலுள்ள ஒரு வயல் காணியிலிருந்து சடலம் மீட்கப்பட்டது. இந்த மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இனந்தெரியாத நபர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் என்று நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இறக்காமம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, மேலதிக விசாரணைகளை பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

உயிரிழந்தவர் அக்கரைப்பற்று பகுதியைச் சேர்ந்த 63 வயது மதிக்கத்தக்க முஹமது சித்தீக் ஹாஜியார் என்பவரே என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் இளைஞர்கள் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

வேலை ஒன்றை முடித்த பின்னர், அதற்கான கூலி கொடுப்பதில் ஏற்பட்ட தகராறே இந்த கொலைக்கு காரணமாக இருந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அத்துடன் இந்த கொலை கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்று, பின்னர், அருகிலுள்ள வீடொன்றில் சடலம் மறைக்கப்பட்டு, நேற்று சனிக்கிழமை அதிகாலை வேளையில் கரும்பு காணிக்குள் வீசப்பட்டிருப்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், கடந்த வெள்ளிக்கிழமை காலை வாங்காமம் பகுதியில் உள்ள தனது பண்ணையை பார்வையிடுவதற்காக சென்ற குறித்த நபர், வீடு திரும்பாத நிலையில், அவரை உறவினர்கள் தேடிச் சென்றபோதே இந்த சடலம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நத்தார் வியாபாரம் நேற்று அம்பாறையில் களைகட்டியது

அம்பாறை, டிசெ. 25

அம்பாறையில் நத்தார் பண்டிகை வியாபாரம் களைகட்டிக் காணப்பட்டது. உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்கள் இயேசு பிரானின் பிறப்பை கொண்டாடுகிறார்.

இந்நிலையில், அம்பாறையில் நேற்று கிறிஸ்மஸ் வியாபாரம் களைகட்டியது. எனினும், சந்தைகளில் பொருட்களின் விலைகள் அதிகமாக இருந்தன என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இதேவேளை, கிறிஸ்மஸ் பண்டிகையை ஒட்டி கல்முனை நகரத்துக்கு வரும் பொதுமக்களுக்காக விசேட பஸ் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

# காரைதீவு சண்முகா ம. வியில் கணித பூங்கா திறந்து வைப்பு

காரைதீவு, டிசெ. 25

காரைதீவு சண்முகா மகா வித்தியாலயத்தில் கணித பூங்கா நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் செ. மணிமாறன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் வரணியா சாந்தரூபன் கலந்துகொண்டார்.

கணிதப் பூங்கா அமைப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய வலயக் கல்வி பணிப்பாளர், கணக்காளர், பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளருக்கும் கல்லூரி சமூகத்தினர் நன்றிகளைத் தெரிவித்தனர்.




# மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

மட்டக்களப்பு, டிசெ. 25

மட்டக்களப்பு பதுரியா நகர், மாஞ்சோலை பிரதேச மாணவர்களது எதிர்கால கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை கருத்தில் கொண்டு, மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பதுரியா மாஞ்சோலை கல்வி அபிவிருத்தி சங்கம், மாஞ்சோலை ஹிழ்ரிய்யா ஜும்ஆ பள்ளிவாசலுடன் இணைந்து இந்த கௌரவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

பதுரியா கல்வி அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எம்.முஸம்மில் தலைமை நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் பிரதிக்கல்வி பணிப்பாளர் கலந்து கொண்டார். தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.சாதாரண தரப்பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்தவர்கள், பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

# வாழைச்சேனை துறையில் கஞ்சா போதைப்பொருள் மீட்பு

மட்டக்களப்பு, டிசெ. 25

வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து ஒரு தொகை கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டது. அத்துடன், சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரின் விசேட போதை ஒழிப்பு நடவடிக்கையின்கீழ், முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் விசேட பணிப்புரையின் கீழ் நாடளாவிய ரீதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கைள் முன்னெடுக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகணவின் வழிகாட்டலில், மட்டக்களப்பு மாவட்ட



பிரதி பொலிஸ் மா அதிபர் என்.பி.லியனகேயின் கண்காணிப்பில், மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் போதையொழிப்பு சோதனைகள் இடம்பெறுகின்றன.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமன்ன தலைமையில் விசேட பொலிஸ் குழுவினர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனை துறைமுக பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இந்த கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. அத்துடன், சந்தேகத்தினடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ)

# களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக ஒளிவிழா சிறப்புற நடைபெற்றது!

மட்டக்களப்பு , டிசெ. 25

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக ஒளிவிழா பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

குருக்கள்மடம் புனித பிரான்சிஸ் அசிசீயார் தேவாலய அருட்தந்தை ஜீ. அம்றோஸ், ஒளியேற்றும் உலக பணிச்சபையின் அருட்திரு அ.நிரஞ்சன் ஆகியோர் ஆசிச்செய்திகளை வழங்கினர்.

பெரியகல்லாறு தூய அருளானந்தர் தேவாலய மாணவர்கள் மற்றும் தேற்றாத்தீவு புனித யூதா ததேயு தேவாலய மாணவர்களினால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலைநிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் பாடல்களும் இசைக்கப் பட்டன.



நத்தார் தாத்தா வருகையுடன், நிகழ்வுகளை ஆற்றுகை செய்த மாணவர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

உதவி பிரதேச செயலாளர் சத்யகௌரி தரணிதரன், நிர்வாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், அலுவலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

# ஏறாவூர் அஸ்ஹர் கல்லூரியில் இரத்ததான முகாம் நடந்தது!



மட்டக்களப்பு, டிசெ. 25

ஏறாவூர் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில், ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில்

இரத்தானம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் பங்கேற்றார்.

பெருமளவானோர் இரத்தானம் வழங்கிய நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவினர் இரத்த மாதிரிகளைச் சேகரித்தனர்.

ஈழநாடு



# போர் நீடித்தால் பஞ்சமே ஏற்படும்

## ஐ. நா. எச்சரிக்கை

நியூயோர்க், டிசெ. 25

**இஸ்ரேல் - ஹமாஸ் போர் நீடித்தால் காஸாவில் பஞ்சம் ஏற்படும் அபாயம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.**



காஸாவில் சுமார் 5 இலட்சம் பேர் பேரழிவு நிலைமைகளை எதிர்கொள்கின்றனர் என்று ஐ. நா. உலக உணவு ஸ்தாபனம் கண்டறிந்துள்ளது.

சுமார் 22 இலட்சம் சனத்தொகையை கொண்ட காஸா கடும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகின்றது. காஸாவில் யாரும் பட்டினியிலிருந்து பாதுகாப்பாக இல்லை என்று ஐ. நா. உலக உணவு ஸ்தாபனத்தின் சிண்டி மெக்கெய்ன் கூறினார்.

காஸாவுக்குள் உணவுப் பொருட்கள், உயிர்காக்கும் பொருட்கள் செல்வது அவசியமாக உள்ளது. காஸாவுக்கு செல்ல அனுமதிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் போதுமானவையாக இல்லை என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஐ)

# பணய கைதிகளை போர் முடிவுக்கு வரும்வரை விடுவிக்கவே மாட்டோம்!

## ஹமாஸ் அமைப்பு கூறுகிறது

காஸா, டிசெ. 25

காஸா மீதான ஆக்கிரமிப்பு போரை முழுமையாக நிறுத்துவதற்கு இஸ்ரேல் ஒப்புக்கொள்ளும்வரை பணயக் கைதிகள் எவரையும் விடுதலை செய்ய முடியாது என்று ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் ஹமாஸ் அமைப்பால் 100இற்கும் மேற்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதன் பின்னர், காஸாவில் 2 ஆயிரம் ஹமாஸ் அமைப்பினரை கொன்றதாக இஸ்ரேல் கூறுகிறது.

இந்த நிலையில், கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ அமைப்பால் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட சுமார் 120 பேர் இன்னமும் ஹமாஸ் பிடியில் உள்ளனர் என்று நம்பப்படுகின்றது.

காஸாவில் போர் நிறுத்த முயற்சிகள் ஒருபுறம் தொடர்ந்தாலும் மறுபுறத்தில் போரும் நிகழ்கின்றது. தினமும் அப்பாவி பொதுமக்கள் இந்தப் போரில் உயிரிழக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தப் போரில் இதுவரை 8 ஆயிரம் சிறுவர்களும், 6,200 பெண்களுமாக 20 ஆயிரத்து 57 பேர் உயிரிழந்தனர் என்று காஸா சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

(ஐ)

# ஹமாஸ், ஜிஹாத் அமைப்பினர் 200 பேர் இஸ்ரேல் படையால் கைது!

ஜெருசலேம், டிசெ. 25

ஒரு வாரத்தில் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் அமைப்புகளை சேர்ந்த 200 பேரை கைது செய்ததாகவும் அவர்களை தனது நாட்டு எல்லைக்குள் கொண்டு சென்றதாகவும் இஸ்ரேல் பாதுகாப்பு படை அறிவித்துள்ளது.

சந்தேகநபர்களில் சிலர் பொதுமக்களின் மத்தியில் மறைந்திருந்தனர், சிலர் தாமாக முன்வந்து சரணடைந்தனர் என்றும் இஸ்ரேல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், ஹமாஸை அழிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தது முதல் 700 பலஸ்தீன ஆயுததாரிகளை கைது செய்துள்ளதாகவும் இஸ்ரேல் கூறியுள்ளது.

இதனிடையே, ஹமாஸ் அமைப்பு காஸாவில் இஸ்ரேலின் தாக்குதலில் பெரும்பாலும் பெண்களும் சிறார்களும் பலியாகின்றனர் என்று கூறுகிறது.



முன்னதாக கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி தெற்கு இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் ஆயிரத்து 200 பேர் உயிரிழந்தனர். 240 பணயக் கைதிகள் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து ஆரம்பமான காஸா முற்றுகைப் போரில் இதுவரை குறைந்தது 20 ஆயிரம் பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, அண்மையில் காஸாவை விட்டு வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டது. இதனால், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பலஸ்தீனியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐ. நா. தெரிவித்துள்ளது.



# உலகின் சராசரி வெப்பநிலை 1.5ஆக இருக்க 99 வீத வாய்ப்பு

## ஆராய்ச்சியாளர்கள் கணிப்பு

நியூயோர்க், டிசெ. 25

2023ஆம் ஆண்டின் உலக சராசரி வெப்பம் 1.5 பாகை செல்சியஸாக இருக்க 99 வீதம் வாய்ப்புள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கணித்துள்ளனர்.

உலக வரலாற்றில் மிகவும் வெப்பமான ஆண்டாக 2023 அறியப்பட்டுள்ளதாக ஐ.நா.வின் உலக வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. புவி வெப்பமயமாதலைத் தடுக்க அவசரமாக உரிய நீடித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் ஐ. நா. காலநிலை பாதுகாப்பு இயக்கங்கள், சூழலியல் ஆர்வலர்கள் மத்தியில் வலுத்துள்ள நிலையில், 2023ஆம் ஆண்டின் உலக சராசரி வெப்பம் 1.5 பாகை செல்சியஸாக இருக்கும் என்ற கணிப்பு கவனம் பெற்றது.

இந்நிலையில் இன்னோர் அதிர்ச்சியாக 2023-ஆம் ஆண்டின் உலக சராசரி வெப்பம் 1.5 டிகிரி செல்சியஸாக இருக்க 99 சதவீத வாய்ப்புள்ளதாக இன்னோர் அறிக்கை வெளியாகியுள்ளது. இது குறித்து சூழலியல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த 2015ஆம் ஆண்டு பாரிஸ் பருவநிலை ஒப்பந்தம் வரையறுக்கப்பட்டு, அந்த ஒப்பந்தமானது 2016 ஏப்ரல் மாதம் கையெழுத்தானது. பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இந்தியா உட்பட 175 நாடுகள் கையெழுத்திட்டன. உலக வெப்பநிலை உயர்வை 2 பாகை செல்சியஸுக்கு மிகாமல் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே பாரிஸ் ஒப்பந்தத்தின் முக்கிய இலக்காக வரையறுக்கப்பட்டது. ஆனால், ஒக்ரோபர் 2023இன் முடிவடைந்த காலத்தில் எடுக்கப்பட்ட கணக்கின்படி சர்வதேச சராசரி வெப்பம் 1.4 உகைக செல்சியஸ் அதிகரித்திருந்தது. இந்நிலையில், இந்த ஆண்டின் சராசரி வெப்பம் 1.5 பாகை செல்சியஸாக இருக்கும் என கணித்துள்ளது.

கலிபோர்னியாவை மையமாகக் கொண்ட 'பெர்க்லி எர்த்' அமைப்பு இந்த கணிப்பை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில், எல் நினோ ஆண்டில் கடல் மேல்பரப்பு வெப்பமாவது நடக்கும் என்றாலும் இந்த ஆண்டு வெப்பமடைதல் ஆச்சரியமளிக்கும் வகையில் நடந்துள்ளது. அதனால் சராசரி ஆண்டு வெப்பம் 1.5 பாகை செல்சியஸ் என்று 1850-1900 சராசரியைவிட அதிகரிக்கும் என்று கணிக்கிறோம். இதற்கான வாய்ப்பு 99 சதவீதம் உள்ளது என்று அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

2023 தொடங்கி ஜூன் தொடங்கி செப்ரெம்பர் வரையிலான 6 மாதங்களுமே சராசரி வெப்பநிலை புதிய இலக்குகளை எட்டியுள்ளது. 2022இல் கரியமில வாயு, மீதேன், நைத்ரிக் ஒட்சைட் ஆகிய பசுமைக் குடில் வாயுக்கள் வெளியேற்றம் வரலாறு காணாத அளவு அதிகமாக இருந்தது. அது அப்படியே 2023இல் மேலும் அதிகரித்துள்ளது. தொழில் புரட்சி காலத்துக்கு முந்தைய அளவைவிட 50 சதவீதம் அதிகமாக கரியமில வாயு வெளியேற்றம் தற்போது உள்ளது. வட அமெரிக்கா, ஐரோப்பாவின் பனிப் பாறைகள் உருகுதலும் அதிகரித்துள்ளது. பிரான்ஸ், ஜேர்மனி நிலபரப்பை சேர்த்தால் எவ்வளவோ அதைவிட அதிகளவிலான பனிப் பாறைகள் உருகியுள்ளன.

இந்த ஆண்டு எல் நினோ முன்கூட்டியே உருவாகியுள்ளது. அதேபோல் எல்நினோவின் இரண்டாவது ஆண்டு முதல் ஆண்டைவிட கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இத்தகைய மோசமான காலநிலையால் உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிக்கும், பெரியளவில் மக்கள் இடம் பெயர்தலும் அதிகரிக்கும் என்றும் விஞ்ஞானிகள் கணிக்கின்றனர்.

# சீனாவில் வதந்தி பரப்பிய 6,300 பேருக்கு தண்டனை

பீஜிங், டிசெ. 25

சீனாவில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து சமூக ஒழுங்கை நிலை நாட்டும் முயற்சியில் பாதுகாப்பு அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர்.

அதனடிப்படையில் இது வரை வதந்திகளைப் பரப்பிய குற்றத்தின் கீழ் 34 ஆயிரம் இணையக் கணக்குகள் முடக்கப்பட்டு 6 ஆயிரத்து 300இற்கும் மேற்பட்ட நபர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரை 4,800 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சீன பொது பாதுகாப்பு அமைச்சக அதிகாரி லி டாங்க் தெரிவித்துள்ளார்.

'இணையத்தில் தவறான தகவல்களைப் பரப்பி சமூக ஒழுங்கை, அமைதியை கெடுக்க முயற்சிக்கும் இணைய கணக்குகளை முடக்கியுள்ளோம். இந்த நடவடிக்கைகள் நல்ல பலனை அளிக்கும்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2023இல் இணையவழியாக நடக்கும் வன்முறைகள், குற்றங்கள், இழிவுபடுத்துதல், தனிப்பட்ட விபரங்களை திருடுதல் போன்றவற்றுக்கு எதிராக சீன பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதுவரை 110 வழக்குகளை காவல்துறை பதிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# டெங்கு நோய் பரவும் உலகின் முதல் 30 நாடுகளில் இலங்கை

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 25

**உலகளவில் டெங்கு நோய் பரவும் முதல் 30 நாடுகளில் இலங்கை உள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. அத்துடன், டெங்கு நோய் தொற்றாளர்களின் எண்ணிக்கை வரலாறு காணாத அளவில் அதிகரித்து வருவதாகவும் அந்த அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் டெங்கு நோயாளர் அதிகரிப்பால் பொது சுகாதாரத் துறை பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.**

இந்த ஆண்டு உலகளவில் 50 இலட்சத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேநேரம், 5 ஆயிரம் மரணங்களும் பதிவாகியுள்ளன. இந்த நிலையிலேயே உலக சுகாதார நிறுவனம் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில், தமது 11 உறுப்பு நாடுகளில் 10 நாடுகள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில், பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து உட்பட பல நாடுகளில், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், டெங்கு நோய்க்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை பதிவு செய்துள்ளது. குறிப்பாக, இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகள் அதிக டெங்கு அச்சுறுத்தலை எதிர்நோக்கும் முதல் 30 நாடுகளின் தரவரிசையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# எரிபொருள் இருப்பை பேணுமாறு நிலையங்களுக்கு அரசு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

பண்டிகைக் காலங்களில் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் 50 சதவீத எரிபொருள் கையிருப்பை பேண வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக அறிவுறுத்தியுள்ளார்.

லங்கா ஐ. ஓ. சி., இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சினோபெக் ஆகிய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இவ்வாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பண்டிகைக் காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாத வகையில், எரிபொருள் விநியோகம் செய்யுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# யாழ். வந்த பஸ் ஏற்படுத்திய விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

## 10 பேர் காயமடைந்தனர்

கொழும்பு, டிசெ. 25

யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்த வான் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். 10 பேர் காயமடைந்தனர். பேருந்துக்காக காத்திருந்தவரே உயிரிழந்தார்.

கம்பஹா பிரதேசத்தை சேர்ந்த சிலர் யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா வந்தபோது நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது.

அநுராதபுரம் - ரம்பேவவில் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அங்கிருந்து கொழும்பு செல்ல பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்த அதே இடத்தை சேர்ந்த 38 வயது நபரே உயிரிழந்தார்.

இந்த விபத்தில் வானில் பயணித்த 10 பேர் காயமடைந்து அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

(ஐ)

# நத்தார் பண்டிகையை முன்னிட்டு கைதிகளுக்கு பொது மன்னிப்பு!

கொழும்பு, டிசெ. 25

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், நத்தார் பண்டிகையை முன்னிட்டு அதிகளவான கைதிகளுக்கு விசேட அரச மன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர், சிறைச்சாலை ஆணையாளர் (புனர்வாழ்வு) காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

அந்த கைதிகளுக்கு நிபந்தனைகள் மற்றும் வரம்புகளுக்கு உட்பட்டு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இன்று நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு சிறைச்சாலையிலிருந்தும் பொது மன்னிப்பு கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

சிறையில் இருந்த, ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்தின் ஒரு பகுதிக்கு ஒரு மாதம் மன்னிப்பு, அபராதம் செலுத்தாததற்காக சிறையில் இருக்கும் கைதிகளின் தண்டனையின் எஞ்சிய காலத்தை இரத்து செய்தல், 65 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்த கைதிகளுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையில் பாதி அல்லது அதற்கு மேல் உள்ளவர்களுக்கு பொதுமன்னிப்புக்கு தகுதியுடையவர்கள் மற்றும் 40 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் மற்றும் நாளைக்குள் அந்த தண்டனையின் 20 ஆண்டுகள் அனுபவித்த கைதிகளும் மீதமுள்ள தண்டனையை ரத்து செய்வதன் மூலம் பொது மன்னிப்புக்கு தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# அரச ஊழியர்களின் விடுமுறையை 25 நாட்களாக குறைக்க யோசனை!

கொழும்பு, டிசெ. 25

அரச உத்தியோகத்தர்களுக்கு தற்போது வழங்கப்படும் விடுமுறையின் எண்ணிக்கையை 45 நாட்களில் இருந்து 25 நாட்களாக குறைப்பது தொடர்பான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நோக்கத்துக்காக, வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவுக்கு நிறுவன விதிகளைத் திருத்துவதற்கான முன்மொழிவுகளை ஓய்வூதியங்களுக்கான பணிப்பாளர் நாயகம் ஜகத் டி. டயஸ் முன்வைத்துள்ளார்.

விடுமுறை நாட்களை 10 சாதாரண விடுமுறை நாட்களாகவும், 15 ஓய்வு விடுமுறை நாட்களாகவும் மாற்றுவதற்கும் இதனூடாக முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, ஓய்வூதிய செலவு அரச செலவினத்தில் 11.4 சதவீதம் என சுட்டிக்காட்டியுள்ள ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம், செலவினங்களை நிர்வகிப்பதற்கு முழு அரச துறையினரும் பங்களிக்க வேண்டுமென குறித்த துறைசார் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு 45 முன்மொழிவுகளை ஓய்வூதியத்துக்கான பணிப்பாளர் நாயகம் சமர்ப்பித்துள்ளதாக அந்த குழு தெரிவித்துள்ளது. அவற்றில் ஓய்வுபெற்ற சமூகத்தின் நலனுக்காக எதிர்பார்க்கப்படும் நிவாரணங்கள் தொடர்பான ஆலோசனைகளையும் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் ஜகத் டி.டயஸ் முன்வைத்துள்ளார்.

(ஐ)

# ‘யுக்திய சுற்றிவளைப்பு’ தற்காலிகமாக நிறுத்தம்!

## - நேற்றும் 1,534 பேர் கைது -

கொழும்பு, டிசெ. 25

நேற்று அதிகாலை வரை நிறைவடைந்த 24 மணித்தியால ‘யுக்திய சுற்றிவளைப்பு’ நடவடிக்கை மூலம் மேலும் ஆயிரத்து 534 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதான சந்தேக நபர்களில் 23 பேரின் சொத்துகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 99 பேர் புனர்வாழ்வுக்காக அனுப்பப்படவுள்ளனர்.

இந்நிலையில், போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் குற்றக் கும்பலைச் சேர்ந்தவர்களை கைதுசெய்வதற்காக பொலிஸாரால் அமுல்படுத்தப்படும் யுக்திய நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்று முதல் நாளை செவ்வாய்க்கிழமை வரை ‘யுக்திய சுற்றிவளைப்பு’ நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் விசேட கடமைகளுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தப்பட வேண்டியிருப்பதால் இந்த நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

(ஐ)

# மாத்தறை சிறை கைதிகளை பார்வையிடுவதற்கு மட்டுப்பாடு!

கொழும்பு, டிசெ. 25

மாத்தறை சிறைச்சாலையில் நோய் அறிகுறிகளுடன் இருந்த மேலும் 8 கைதிகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

மாத்தறை சிறையில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகள் மத்தியில் ஒரே மாதிரியான நோய் அறிகுறிகள் தென்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்தார். இந்த நேரத்திலேயே மேலும் 8 சிறைக்கைதிகள் அதே அறிகுறிகளுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் மேலும் 8 கைதிகள் நேற்று முன்தினம் இரவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதன்படி மாத்தறை பொது வைத்தியசாலையில் தற்போது 16 கைதிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் இருவர் தொடர்ந்தும் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த கைதியின் உயிரியல் மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், மூளைக் காய்ச்சல் காரணமாக குறித்த கைதி உயிரிழந்தார் என்று சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை பண்டிகை காலத்தை முன்னிட்டு சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளை பார்வையிடுவதற்கு இன்று அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நோய் நிலைமை காரணமாக மாத்தறை மருத்துவமனையில் உள்ள கைதிகளை பார்வையிடுவதற்கான அனுமதி வழங்கும் நேரத்தை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறைச்சாலை பிரிவு தெரிவித்தது.

(ஐ)

## தீர்வு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின்போது, புதிய பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பின் ஊடாக இனப்பிரச்னைக்கான தீர்வு அதிகாரப் பகிர்வு விடயங்களை மையப்படுத்தி ஒரு வருடங்களுக்குள் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீடித்துவரும் இனப்பிரச்னைக்கான தீர்வினை வழங்குவதற்கு தற்போதைய பாராளுமன்றத்துக்கு ஆணையில்லை என்றும் புதிய பாராளுமன்றத்தில் ஒரு வருட காலத்திற்குள் புதிய அரசியலமைப்பின் ஊடாகவே தீர்வு மற்றும், அதிகாரப்பகிர்வு விடயங்கள் கையாளப் படப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

தற்போதுள்ள அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் காணப்படுகின்றது. அதுபாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்ட விடயமாகும். அதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு எந்தவிதமான தடைகளும் காணப்படவில்லை.

ஆனாலும் அந்த விடயங்களை கையாள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரில்லாதவராக காணப்படுகின்றார். இதற்கான காரணம் எமக்குப் புரியவில்லை. அதேநேரம், புதிய அரசியலமைப்பின் பெயரில் 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அரசியலமைப்பிலிருந்து நீக்குவதற்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இலக்காகக் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது. அதுமட்மன்றி, தமிழர்களின் இனப்பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் இந்தியா காத்திரமான வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக இந்தியா - இலங்கை ஒப்பந்தம் அதற்கான ஒரு சான்றாக அமைகின்றது.

இந்நிலையில், அரசாங்கம், புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பகிர்வு உள்ளிட்டவிடயங்களை வழங்குவதாக கூறி, இனப்பிரச்னை விடயத்தில் இந்தியாவின் தலையீட்டை முழுமையாக களைவதற்கே சதித்திட்டமொன்று முன்னெடுக்கப்படுவதாகவே நாம் கருதுகின்றோம்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் புதிய அரசியலமைப்பு பற்றி பேசுகின்றார். ஏற்கனவே அவர் பிரதமராக இருந்த தருணத்தில் பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்டு, இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்ட நிலையில் எந்த முன்னெடுப்புக்களுமின்றி அந்த அறிக்கை கிடப்பில் போடப்பட்டுள்ளது.

அவர் மீண்டும் புதிய அரசியலமைப்பு பற்றி பேசுவதற்கு பதிலாக ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைச்சாத்தியமாக்குவது தொடர்பில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்ற கேள்விகள் காணப்படுகின்றன.

எம்மைப் பொறுத்தவரையில், தற்போதைய அரசியலமைப்பில் காணப்படுகின்ற 13 ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக அமுலாக்க வேண்டும். அதன் பின்னர் அதிகாரப் பகிர்வு தொடர்பிலான விடயங்களை படிப்படியாக முன்னெடுக்க வேண்டும் என்பதே நிலைப்பாடாகும்.

அதனைத் தவிர்த்து காலங்கடத்திச் செல்லும், செயற்பாடுகளுக்கும், இந்தியாவை புறந்தள்ளுவதற்கு முயற்சிக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிக்க முடியாது-என்றார்.(அ)

## 1004..

சிறைச்சாலையில் இருந்து 42 பேரும், மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து 47 பேரும் திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து 12 பேரும், வவுனியா சிறைச் சாலையில் இருந்து 25 பேரும், யாழ்ப் பாண சிறைச்சாலையில் இருந்து 16 பேரும் இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இன்று மொத்தமாக 1004 பேர் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நாளை...

நாயகம் அதுல கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கம் அல்லது சுனாமி ஏற்பட்டால் சர்வதேச சுனாமி எச்சரிக்கை மையங்கள் 24 மணி நேரமும் தொடர்ந்து விழிப்புடன் இருக்கும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை உட்பட பல நாடுகளை பாதித்த சுனாமி பௌர்ணமி நாள் அன்றே ஏற்பட்டதாகவும், இதுவோ மக்கள் அச்சம் கொள்வதற்கான காரணம் என பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், நாளை ஓரளவு மழை பெய்யக்கூடும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

பிரதான நினைவேந்தல் நிகழ்ச்சி நாளை செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணிக்கு காலி ஹிக்கடுவ தெல்வத்த பரலிய சுனாமி நினைவிடத்தில் நடைபெற உள்ளது.

அன்றைய தினம் உயிரிழந்தவர்களை நினைவு கூறும் வகையில் நாளை காலை 09.25 மணி முதல் 09.27 மணி வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கோரியுள்ளது. (அ)

## புதிய...

நாட்டின் சவால்களின் உண்மைத் தன்மையை அறிந்துகொண்டு, பொறுப்புகளை நிறை வேற்றுவதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டுமென அழைப்பு விடுக்கும் அதேநேரம், உலக மக்கள் அனைவருக்கும் அன்பும், அமைதியும் நிறைந்த பண்டிகையாக இம்முறை நத்தார் பண்டிகை அமைய என வாழ்த்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.(அ)

## ஜனாதிபதித்...

காரணம் என்பதை நீதிமன்றம் தெளிவான பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது. அவ்வாறிருகையில் அவர்களின் பின்னால் செல்வதா அல்லது நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும் சுதந்திர கட்சியுடன் இணைந்து செயற்படுவதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

உத்தேச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பொறுத்தமான வேட்பாளரை சுதந்திர கட்சி தக்க சமயத்தில் களமிறக்கும். கட்சியின் நிறைவேற்றுக்குழுவே அந்த தீர்மானத்தை எடுக்கும். அதற்கமைய நிறைவேற்றுக்குழு என்னை வேட்பாளராகத் தெரிவு செய்தால், களமிறங்குவதற்கு நான் தயாராகவே உள்ளேன்-என்றார்.

இதே வேளை இது தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவிக்கையில், சுதந்திர கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பாலானோரின் நிலைப்பாடு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதாகவே காணப்படுகிறது - என்றார். (அ)

# கொக்குத்தொடுவாயில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம்





யாழ்ப்பாணம்,டிசெ.25

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்றுமுன் தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

மாணவர்களுக்குச் சூழல் அறிவைப்புகட்டி அவர்களுக்குச் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்கு பற்றுநர்களாக்கும் நோக்குடனும், மாணவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயத்தின் அதிபர் க.நரேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கனடா - உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும், ரொறன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பின் தாபகத் தலைவருமான ஆர். என்.லோகேந்திரலிங்கம் கலந்து கொண்டிருந்தார். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், விவசாயப் போதனாசிரியர் த.துளசிராம் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றியிருந்தார்கள்.

நூற்றுக்கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் பங்கேற்றிருந்த இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் அனைவருக்கும் ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பால் சூழல் விழிப்புணர்வுக் குறிப்பேடுகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனா...

கொரோனா தொற்று எவையும் நீண்டகாலமாக வடமாகாணத்தில் பதிவாகவில்லை. ஆனால் அண்மைய நாட்களாக டெங்கு நோய் தொற்றுக்கு உள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றன.

தினமும் சராசரியாக 100 பேர் வரையில் டெங்கு நோய் தாக்கத்திற்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனவே வடமாகாண மக்கள் கொரோனா தொற்று தொடர்பில் அச்சமடைய தேவையில்லை. ஆனால் டெங்கு நோய் தொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் -என்றார். (அ)

## யாழ். பல்கலை...

முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்தார்.

காய்ச்சல் காரணமாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவி, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் குறித்த மாணவி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

உயிரிழப்பு தொடர்பான உடற்கூற்று பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

இதன்போது டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட குறித்த மாணவிக்கு செலுத்தப்பட்ட மருந்தின் ஒவ்வாமை காரணமாகவே உயிரிழப்பு இடம்பெற்றது என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்த மாணவியின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (அ)

## யாழ்.சிறை...

இதில் சுன்னாகத்தை சேர்ந்த ஜெ. நிக்சன் (வயது-30) என்பவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

## டெங்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில்யாழ் போதனா வைத்திய சாலையில் தற்போது 114 பேர் டெங்கு தொற்றுக்குள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே இருந்த விடுதிகளில் இடப்பற்றாக்குறை காணப்பட்டதன் காரணமாக மேலதிகமாக 2 காய்ச்சல் விடுதிகளை இந்த டெங்கு நோயாளர்களுக்கென புதிதாக ஆரம்பித்திருக்கின்றோம்.

டெங்குத் தொற்றுக்குள்ளாகி விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 114 பேரில் அரை வாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண காய்ச்சலுடன் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் அதே போல அரைவாசிக்கும் மேற்பட்டோருக்கு தாதியரின் கண்காணிப்பில் அவர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

மேலும் சுகாதார அமைச்சினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுடெங்கு தொற்றுக்குள்ளானோக்குரிய மருந்து வகைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதன் காரணமாக விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்படுகின்றது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# இணையம் ஊடாக யாழில் 46 இலட்சம் ரூபாய் மோசடி!

யாழ்ப்பாணம், டிசெ. 25

இணையம் ஊடாக அதிக பணம் ஈட்டலாம் என ஆசை காட்டி பல இலட்ச ரூபாய் பணம் யாழ்ப்பாணத்தில் மோசடி செய்யப்பட்டமை பொலிஸ் முறைப்பாடுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் செய்யப்பட்ட முறைப்பாடுகளின்படி ஒருவர் 30 இலட்சம் ரூபாயையும், மற்றொருவர் 16 இலட்சம் ரூபாயையும் இழந்துள்ளனர்.

இது குறித்து தெரியவருவதாவது,

இணையம் ஊடாக அதிக பணம் ஈட்ட முடியும் என ஆசை வார்த்தைகளுடனான சமூக வலைத்தளங்கள் ஊடாக வரும் விளம்பரங்களை நம்பி அந்த இணைப்பின் ஊடாக உட்செல்வோருக்கு முதலில் சிறு தொகை பணத்தை அவர்கள் சொல்லும் கணக்குக்கு இணையம் மூலமாக செலுத்துமாறு கேட்கப்படும்.

முதலில் சிறு தொகை பணத்தை செலுத்த சொல்வதானால் அதனை முன்பின் யோசிக்காமல் உடனடியாக நிறைவேற்றுகின்றனர்.

பணம் செலுத்தப்பட்டதும், அதொரு முதலீடு எனவும், அதனால் வந்த வருமானம் என ஒரு தொகையை இவர்களுக்கு வைப்பு செய்து ஆசையை மேலும் தூண்டுவார்கள்.

இவ்வாறாக பெரும் தொகை பணத்தை வைப்பிலிட்ட வைத்த பின்னர், அந்த பணத்துடன் அவர்கள் காணாமல் போய் விடுவார்கள். அதன் பின்னரே தாம் ஏமாற்றப்பட்ட விடயம் இவர்களுக்கு தெரியவரும். ஏமாற்றப்பட்ட விடயம் அறிந்த பின்னர் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்படுகின்றது.

முறைப்பாடுகளும் யாருக்கு எதிரானது என்பது போன்ற விவரங்கள் இல்லை. இதனால், விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல்கள் நிலவுகின்றன. எனவே இவ்வாறான இணைய மோசடியாளர்களிடம் சிக்காது மக்கள் தான் விழிப்புடன் இருக்க வேண்டும் என பொலிஸார் தெரிவித்தனர்.

'யுக்திய' போதை ஒழிப்பு நடவடிக்கை

# முல்லைத்தீவில் 250 பேர் கைது; 25 பேர் புனர்வாழ்வு முகாமுக்கு

முல்லைத்தீவு, டிசெ. 25

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 17ஆம் திகதி முதல் இன்று அதிகாலை வரையான ஒரு வார காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 250 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் போதைப்பொருள் பாவனையாளர்கள் 113 பேர் உள்ளடங்குவர. இதில் 25 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த விதாரண தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்ற போதை ஒழிப்பு திட்டத்தின் கீழ் பொலிசாரினால் விசேடமான சுற்றி வளைப்புகள் பல நடத்தப்பட்டு பல்வேறு கைது சம்பவங்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் மீட்கப்படுகின்ற சம்பவங்கள் இடம் பெற்றுவருகிறது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் பத்து பொலிஸ் நிலைய பிரிவுகளில் நேற்று அதிகாலை வரையிலும் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இந்த சுற்றி வளைப்புகளின் போது 3 கிராம் ஹெரோயின், 480 கிராம் ஐஸ், ஒரு கிலோ 855 கிராம் 39 மில்லிக்கிராம் கேரள கஞ்சா, கஞ்சா செடி 5 மற்றும் 48 கிராம் வேறு வகையான போதை பொருட்கள் மற்றும் 443 லீற்றர் கசிப்பு, 1797 லீற்றர் கோடா உள்ளிட்டன மீட்கப்பட்டன. மேலும், இரண்டு பெண்கள் உள்ளடங்களாக 111 ஆண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்" என தெரிவித்தார்.

# காணாமல்போன மாணவிகள் குறித்து எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை

## ஒரு மாதம் நெருங்கும் நிலையில் பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

குருநாகல் பகுதியில் காணாமல் சென்று 24 நாட்கள் ஆகியும் இரண்டு பாடசாலை மாணவிகள் தொடர்பில் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலகெதர மற்றும் மாவத்தகமை பகுதியை சேர்ந்த இரண்டு மாணவர்கள் கடந்த 24 நாட்களாக காணாமல் போயிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மாணவர்களின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடளித்தும், அவர்கள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை.

மாணவிகள் இருவரும் நண்பிகள் என்பதுடன் என்பதுடன், பகுதி நேர வகுப்புக்கு செல்வதாக கூறி விட்டு கடந்த முதலாம் திகதி வீட்டிலிருந்து சென்றுள்ளனர்.

இந்தநிலையில், இரண்டு பேரும் வீட்டுக்கு திரும்பாத நிலையில் பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

காணாமல் போயுள்ள இருவரையும் தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நாட்டின் 60வீதமான குடும்பங்கள் வருமான இழப்பை சந்தித்துள்ளன!

## தொகை மதிப்பு புள்ளிவிவர திணைக்களம்

கொழும்பு, டிசெ. 25

கடந்த 2022 மார்ச் மாதத்துக்கு பிறகு, இலங்கையில் 60 சதவீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் தங்கள் மொத்த வருமானத்தில் இழப்புகளை சந்தித்துள்ளன என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேலை நேரம் குறைதல், கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் குறைதல், விற்பனை குறைதல், வேலை இழப்பு மற்றும் வேலை வாய்ப்பு ஒப்பந்தங்களின் தற்காலிகமாக இடைநிறுத்தம், கால்நடை தீவனம், எரிபொருள், உரம் ஆகியவற்றின் விலையேற்றம் ஆகியன இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பொருளாதார நெருக்கடியை குடும்பங்கள் எவ்வாறு எதிர்கொள்கின்றன என்பதை அறிந்து கொள்வதற்காக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி, 60.5 சதவீதமான குடும்பங்களின் மொத்த குடும்ப சராசரி மாத வருமானம் குறைத்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், 91 சதவீதமான குடும்பங்கள் தங்கள் மொத்த குடும்ப சராசரி மாதாந்திர செலவில் அதிகரிப்பை சந்தித்துள்ளதுடன், பொருளாதார நெருக்கடியால் 22 சதவீதமான குடும்பங்கள் கடனாளிகளாக மாற்றியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக மொத்த சனத்தொகையில் 7 சதவீதமானோர் தமது சுகாதார சிகிச்சை முறைகளையும் மாற்றிக்கொண்டுள்ளனர்.

அதேநேரம், 3 முதல் 21 வயதுக்கு இடைப்பட்ட தனிநபர்களில் 54.9 சதவீதமானோரின் கல்வி நடவடிக்கைகளும் இந்த பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, குடும்பங்கள் எவ்வளவு எளிதில் உணவைப் பெற்றுக் கொள்கின்றன என்பது தொடர்பில் குறித்த ஆய்வின்போது, கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, 93 சதவீதமான குடும்பங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவு நுகர்வு கொண்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் 7 சதவீதமான குடும்பங்கள் எல்லைக்கோடு அல்லது மோசமான நுகர்வை கொண்டவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# ரூ. 2 கோடி பெறுமதியான பீடி இலைகள் பிடிபட்டன



கொழும்பு, டிசெ. 25

சட்ட விரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான 1,955 கிலோ பீடி இலைகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று நுரைச்சோலை பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளைப் பிரிவுக்குச் சொந்தமான கடற்படை கப்பலான தம்பபன்னி, நுரைச்சோலை பகுதியில் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில், நுரைச்சோலை பொருளாதார நிலையத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான வகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்று சோதனையிடப்பட்டபோதே சட்டவிரோதமாக கடத்தி வரப்பட்ட பீடி இலைகள் சிக்கின.

இது தொடர்பில் லொறியின் சாரதி கைது செய்யப்பட்டாரென கடற்படை தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் லொறி மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.

# மாணவர்கள் பார்த்திருக்க மோதிக்கொண்ட ஆசிரியர்கள்!

வவுனியா, டிசெ. 25

வவுனியாவில் பாடசாலை ஒன்றின் ஆசிரியர்கள் மூவர் மோதியதில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடே இந்த மோதலுக்கு காரணம். இந்த முரண்பாடும் மோதலும் மாணவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்காக குழு ஒன்றை அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# இங்கிலாந்துக்கு எதிரான தொடர் மே. இந்தியத் தீவுகள் வசமானது!

அன்ரிகுவா, டிசெ. 25

இங்கிலாந்துக்கு எதிரான 5ஆவது இருபது - 20 போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் 'த்ரில்' வெற்றி பெற்று, 3-2 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. ஏற்கெனவே, ஒருநாள் தொடரையும் இழந்த இங்கிலாந்து, தனது பயணத்தை தோல்வியுடன் நிறைவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 19.3 ஓவர்களில் 10 விக்கெட்களை இழந்து 132 ஓட்டங்களே சேர்க்க, அடுத்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் 19.2 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 133 ஓட்டங்கள் சேர்த்து வென்றது.

3 விக்கெட்கள் சாய்த்த மேற்கிந்தியத் தீவுகளின் குடாகேஷ் மோட்டி ஆட்டநாயகனாகவும், தொடர் முழுவதுமாக 331 ஓட்டங்கள் சேர்த்த பில் சால்ட் தொடர் நாயகனாகவும் அறிவிக்கப்பட்டனர்.

இந்த கடைசி போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள், களத்தடுப்பை தெரிவு செய்தது. இங்கிலாந்தின் துடுப்பாட்டத்தில் தொடக்க வீரர் ஃபில் சால்ட் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 38 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருந்தது. லியம் லிவிங்ஸ்ரன் 28, மொயின் அலி 23 ஓட்டங்கள் அடித்தனர்.

அணித் தலைவர் ஜோஸ் பட்லர் 11, வில் ஜாக்ஸ் 7, ஹாரி புரூக் 7, சாம் கரன் 12, கிறிஸ் வோக்ஸ் 2, ரெஹான் அகமது 0, ஆதில் ரஷீத் 1 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சாளர்களில் குடாகேஷ் மோட்டி 3, ஆண்ட்ரே ரஸ்ஸெல், அகீல் ஹூசைன், ஜேசன் ஹோல்டர் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் கைப்பற்றினர்.

பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் துடுப்பெடுத்தாடியது.

பிரண்டன் கிங் 3, ஜோன்சன் சார்லஸ் 27, நிகோலஸ் பூரண் 10, ஷெர்பேன் ரதர்போர்ட் 20, ரோவ்மென் பவெல் 8, ஆந்த்ரே ரஸல் 3 ஓட்டங்களுக்கு விக்கெட்டை இழந்தனர். முடிவில் ஷாய் ஹோப் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 43, ஜசன் ஹோல்டர் 4 ஓட்டங்களுடன் அணியை வெற்றிக்கு வழிநடத்தி ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்து தரப்பில் ரீஸ் டோப்லி, ஆதில் ரஷீத் ஆகியோர் தலா 2, கிறிஸ் வோக்ஸ், சாம் கரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட் சாய்த்தனர். (ஐ)



# தோல்வியிலும் சாதித்த பங்களாதேஷ் அணி!

வெலிங்டன், டிசெ. 25

நியூஸிலாந்து அணிக்கு எதிரான தொடரை பங்களாதேஷ் இழந்துள்ளது. எனினும், இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணியை வெற்றி கொண்டது. இதன் மூலம் நியூஸிலாந்தை அதன் சொந்த மண்ணில் முதன்முறையாக வெற்றி பெற்றது பங்களாதேஷ்.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள், 3 இருபது -20 தொடர்களில் விளையாடி வருகிறது பங்களாதேஷ் அணி. இதில் 2-1 என ஒருநாள் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியுள்ளது.

முதலிரண்டு போட்டிகளில் நியூசிலாந்து வெற்றி பெற்ற நிலையில் 3ஆவது போட்டியில் நியூஸிலாந்தை 98 ஓட்டங்களுக்கு சுருட்டியது பங்களாதேஷ். 15.1 ஓவர்களில் 99 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் வெற்றியை பெற்றது.

பந்துவீச்சில் சொறிஃபுல் இஸ்லாம், டன்ஜிம் ஹசன் ஷகிப், சௌமிய சர்கார் தலா 3 விக்கெட்களை எடுத்தார்கள். துடுப்பாட்டத்தில் ஷண்டோ அரைசதம் டித்து அசத்தினார்.

இந்தத் தொடரை பங்களாதேஷ் இழந்தாலும் ஒரு சாதனையை படைத்துள்ளது. நியூஸிலாந்தை அதன் சொந்த மண்ணில் முதன்முறையாக ஒருநாள் போட்டிகளில் வென்று சாதனை படைத்துள்ளது.

தொடரை இழந்தாலும் இது வெற்றிகரமான தோல்வியாக மாற்றியுள்ளார்கள் பங்களாதேஷ் அணியினர். (ஐ)

# 2024 ஐ. பி. எல். தொடரில் ஹார்திக் ஆடமாட்டார்?



மும்பை, டிசெ. 25

இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஹார்திக் பாண்ட்யா வரவிருக்கும் ஐ. பி. எல். தொடரில் பங்கேற்பது சந்தேகம் எனத் தகவல் வெளியாகியுள்ளது. காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் அவர், இம்முறை ஐ. பி. எல். தொடரிலிருந்து விலகக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

புனேயில் பங்களாதேஷுக்கு எதிரான உலகக் கிண்ணப் போட்டியில் கணுக்காலில் காயம் ஏற்பட அந்தத் தொடரில் விலகினார் ஹார்திக். தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் அவர் அடுத்த மாதம் ஆப்கானிஸ்தானில் நடக்கும் இருபது - 20 தொடரிலும் விளையாடவில்லை. இப்போது வரவிருக்கும் ஐ. பி. எல். தொடரிலும் அவர் பங்கேற்பது சந்தேகமாகவே உள்ளது.

கடந்த இரண்டு தொடர்களில் குஜராத் ரைட்டன்ஸ் அணியின் தலைவராக செயல்பட்டுவந்த ஹார்திக் பாண்ட்யா, சமீபத்தில் நடந்த முடிந்த ஐ. பி. எல். 2024 மினி ஏலத்துக்கு முன்பாகவே, ட்ரேடிங் முறையில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டார். ரோகித் சர்மாவுக்கு பதில் ஹார்திக் கேப்டனாக அறிவிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புகளும், அதேநேரம் வரவேற்பும் கிடைத்து வருகிறது. இந்த நிலையில், அவர் ஐ. பி. எல். தொடரில் விளையாடுவது சந்தேகம் என வெளியாகியுள்ள தகவல் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பின்னடைவாக இருக்கும். (ஐ)

# சூர்யகுமார் யாதவ் காயத்தால் விலகல்

மும்பை, டிசெ. 25

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரின் போது கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்திய வீரர் சூர்யகுமார் யாதவ் எதிர்வரும் ஜனவரி 11ம் திகதி தொடங்கும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் இருந்து விலகியுள்ளார்.

ஜொகன்னர்பேர்க்கில் நடந்த 3ஆவது இருபது - 20 போட்டியின்போது களத்தடுப்பில் ஈடுபட்டபோது சூர்யகுமார் யாதவுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இந்த காயம் குணமாக ஆறு வாரங்கள் ஆகும் என்பதால் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இதுதொடர்பாக பேசியுள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட் சபை அதிகாரி ஒருவர், "காயம் காரணமாக சூர்யகுமார் யாதவால் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக விளையாட முடியாது. டெஸ்ட் தொடருக்கு தெரிவாக வாய்ப்பில்லை என்பதால், ஐ. பி. எல்லில்விளையாடுவதற்கு



முன்பு அவரது உடற்தகுதியை சரிபார்க்க வரும் பெப்ரவரி மாதம் நடக்கும் ரஞ்சி கிண்ணத்தில் மும்பைக்காக விளையாடுவார்" என்று தெரிவித்துள்ளார்.

ஹார்திக் பாண்ட்யா, ருதுராஜ் கெய்க்வாட் ஆகியோர் காயத்தால் அவதியுறுகின்றனர். இதனிடையே தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் இஷான் கிஷன் தனிப்பட்ட காரணங்களுக்காக பங்கேற்கவில்லை. அவரும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் பங்கேற்பதில் சந்தேகம் நிலவுகிறது. (ஐ)

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் நோமன் அலி விலகினார்

சிட்னி, டிசெ. 25

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து காயம் மற்றும் உடல்நல குறைவு காரணமாக பாகிஸ்தான் சுழல் பந்துவீச்சாளர் நோமன் அலி விலகியுள்ளார்.

பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 360 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி வருகிற டிசெ. 26 ஆம் திகதி தொடங்குகிறது. இரண்டாவது டெஸ்ட் போட்டி தொடங்குவதற்கு இன்னும் இரண்டு நாள்களே இருக்கும் நிலையில், பாகிஸ்தான் அணியின் சுழல் பந்துவீச்சாளர் நோமன் அலி மீதமுள்ள போட்டிகளிலிருந்து விலகி



யுள்ளார். ஏற்கனவே, பாகிஸ்தான் வேகப் பந்துவீச்சாளர் குர்ரம் ஷாசத் காயம் காரணமாக விலகிய நிலையில், அந்தப் பட்டியலில் தற்போது நோமன் அலியும் இணைந்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கடைசி 15 டெஸ்ட் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணியே வெற்றி பெற்றுள்ளது. பாகிஸ்தான் கடந்த 1995 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணியை அதன் சொந்த மண்ணில் டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உலகின் குப்பைத் தொட்டியா அட்டகாமா பாலைவனம்?

சிதம்பரம் இரவிச்சந்திரன்

இந்தியாவின் மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் இருப்பது போல, தென்னமெரிக்காவில் ஆன்டீஸ் மலைத்தொடர் உள்ளது. கிழக்கில் உலகின் மிகப் பெரிய மழைக்காடுகளான அமேசான் காடுகளில் பூமியின் மிகப் பெரிய அமேசான் நதி ஓடுகிறது. மேற்கில் பெரும் பரப்பில் அட்டகாமா (Atacama) பாலைவனம் அமைந்துள்ளது. அட்டகாமாவின் சிறப்புகள் அனைத்தும் அதன் தனித்தன்மையால் உலகப் புகழ் பெற்றவை.

சராசரி 600 மீட்டர் உயரமுள்ள இந்த பாலைவனத்தில் 4,000 மீட்டர் வரை உயரமுடைய பிரதேசங்கள் அமைந்துள்ளன. வடக்கு சிலி, பொலிவியா, அர்ஜெண்டினா ஆகிய நாடுகளில் இப்பாலைவனம் பரவியுள்ளது. துருவப் பகுதிகளைத் தவிர உலகில் மிக வறண்ட பாலைவனமாக இது கருதப்படுகிறது. இந்த அளவு கடுமையான வறட்சி உள்ளபோதும், பல தாவரங்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. பசுபிக் கடலோரம் அமைந்துள்ள இது கேரள மாநிலத்தின் பரப்பைப் போல இரண்டரை மடங்கு பெரியது.






### ஹம்போல்ட் நீரோட்டம்

மிகக் குறைவான மழை மட்டுமே பெய்யும் இந்தப் பாலைவனத்தின் சில பகுதிகளில் வரலாற்றில் ஒரு முறை கூட மழை பெய்ததாகப் பதிவுகள் இல்லை. தென்னமெரிக்காவின் மேற்கில் நிலநடுக்கோட்டுத் திசையில் அட்டகாமாவின் வட பகுதியில் கரையில் இருந்து 500 - 1,000 கிலோமீட்டர் தூரத்தில் கிழக்கு நோக்கி ஹம்போல்ட் அல்லது குளிர் நீரோட்டம் என்று அழைக்கப்படும் நீரோட்டம் செல்கிறது. குறைந்த உவர் தன்மையுடைய நீரால் ஆன இத்தகையவை ஹம்போல்ட் நீரோட்டம் என்று அழைக்கப்படுகிறது.

இதில் அடங்கியிருக்கும் குளிர்ந்த நீரும் அதனுடன் வீசும் காற்றும் மழைமேகங்கள் உருவாவதைத் தடுக்கிறது. இதுவே இப்பகுதி ஒரு பாலைவனமாக மாறக் காரணம். இது தவிர அமேசான் கரையில் இருந்து ஈரப்பதம் உடைய வாயு இப்பகுதிக்கு வராமல் ஆண்டீஸ் மலைத்தொடர் தடுத்து நிறுத்துகிறது. இதனால் இப்பகுதி முழுமையான ஒரு பாலைவனமாக மாறியது.

### ஆய்வுகளின் பரிசோதனைக்கூடம்

கடும் வறட்சி, மிகக் குறைவான தாவரங்கள், தாதுக்கள் அடங்கிய வளமான நிலப்பகுதி ஆகியவற்றால் இந்த இடம் செவ்வாய் கோளின் நில மேற்பரப்பை ஒத்துள்ளது. இதனால் நாசாவும், மற்ற விண்வெளி நிறுவனங்களும் இப்பாலைவனத்தை செவ்வாயில் பயணிக்கும் ஊர்தி வாகனங்கள் மற்றும் பிற கருவிகளைப் பரிசோதித்துப் பார்க்கும் தளமாக பயன்படுத்துகின்றன. கடினமான வாயு மண்டலம் உள்ளதால் இது போன்ற இடங்களில் நிலவும் சூழ்நிலையை சமாளித்து வாழ உதவும் வாழ்க்கை முறை பற்றி ஆராயும் இடமாகவும் இது பயன்படுத்தப்படுகிறது.

வறண்ட நிலப்பகுதியாக இருந்தாலும் அட்டகாமாவில் பலதரப்பட்ட சூழல் மண்டலங்கள் காணப்படுகின் றன.





இதில் உவர் நிலப்பரப்புகள், உப்பு தடாகங்கள், வெப்ப நீரூற்றுகள், தாவரங்கள் வாழவே முடியாத அளவு வறண்ட பகுதிகள் போன்றவை அடங்கும். கடற்கரைப் பகுதியில் உருவாகும் மூடுபனியில் இருந்து கிடைக்கும் ஈரப்பதத்தைப் பயன்படுத்தி வளரும் சில தனிச்சிறப்பு மிக்க தாவரங்கள் மற்றும் விலங்குகளை இங்குள்ள சில பகுதிகளில் காணலாம்.

### வான் ஆய்வுகளின் சொர்க்கபூமி

தெள்ளத்தெளிவான வானம், குறைந்த ஈரப்பதம், குறைவான ஒளி மாசு போன்றவை உள்ளதால் இந்த இடம் வான் ஆய்வுகளுக்குப் புகழ் பெற்றது. இங்கு இருந்து இரவில் வானத்தை உற்றுநோக்கும்போது மிகச் சிறந்த வான் காட்சிகளைக் காணலாம். அட்டகாமா லார்ஜ் மில்லிமீட்டர் அரே (யுடுஆயு) உள்ளிட்ட பல முக்கிய வான் ஆய்வு கண்காணிப்பு நிலையங்கள் பிரபஞ்சத்தைப் பற்றி ஆராய இங்கு நிறுவப்பட்டுள்ளன.

கணிசமான அளவு செம்பு சேகரம் உள்ள இப்பகுதியில் இருந்து சோடியம் நைட்ரேட், லித்தியம், தங்கம், வெள்ளி, போரான் போன்றவை கிடைக்கின்றன. நட்சத்திரங்கள் இல்லாத வானம், கடினமான இடங்களில் உயிர் வாழும் உயிரினங்களின் திறன், தாதுவளம் போன்றவற்றைப் பார்க்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருகின்றனர்.

### அட்டகாமாவின் வில்லன்

மனிதனின் கால்தடம் பதியாத தனிமைப்பட்ட அழகு பூமியாக இந்த இடம் உள்ளது என்று கருதினால் அது தவறு! பெருமளவில் உலகின் பல பகுதிகளில் இருந்தும், பயன்படுத்திய பிறகு தூக்கியெறியப்படும் துணிவகைகள் இங்கு கொண்டு வந்து கொட்டப்படுகின்றன. மனிதன் ஆடை பயன்படுத்தும் முறையில் கடந்த சில ஆண்டுகளில் அசுரவேக மாற்றங்கள் நிகழ்கின்றன.

மின்னல் வேகத்தில் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படும் ஃபாஸ்ட் ஃபாஷன் எனப்படும் இந்த முறை ஆடை உற்பத்தியை, உடனடியாக மாற்ற வேண்டிய ஒரு முக்கிய சூழல் பிரச்சனை என்று ஐநா கூறுகிறது. 2000-2014ல் உலக ஆடை உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்தது. விற்பனையில் 60 வீத உயர்வு ஏற்பட்டது. ஆனால் முன்பு பயன்படுத்தப்பட்டதில் பாதியளவு துணிகள் மட்டுமே இன்று பயன்படுத்தப்படுகின்றன.

இப்போது உற்பத்தி செய்யப்படும் ஆடைகளில் ஐந்தில் மூன்று பகுதியும் உற்பத்தி செய்யப்பட்டு ஒரு ஆண்டிற்குள் தூக்கி எறியப்படுகின்றன. இவை தேவையான முறையில் மறுசுழற்சி செய்ய, புதுப்பிக்கவோ சாத்தியம் இல்லாத இடங்களுக்குப் போய்ச் சேர்கின்றன. அங்கு இவை மலை போல குவிக்கப்படுகின்றன, எரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விநாடியும் உலகில் ஒரு டிரக் நிறைய துணிகள் இவ்வாறு கைவிடப்படுகின்றன. இது போன்ற துணிகள் மலை போல குவிக்கப்பட்டிருக்கும் பல இடங்கள் அட்டகாமாவில் உள்ளன. மிக அழகான இந்த நிலப்பரப்பு வளர்ந்த நாடுகளின் குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டும் இடமாக மாறியுள்ளது. உள்நாட்டுத் தொழிற்துறை மற்றும் பொருளாதாரத் துறையில் முன்னேற்றத்தை ஏற்படுத்த சிலி கரையோரம் அமைந்துள்ள இக்யுயிக் (Iquique) துறைமுகத்தை டியூட்டி ஃப்ரீ துறைமுகமாக மாற்றியது.

இறக்குமதி மற்றும் இறக்குமதி செய்பவற்றை புதுப்பித்து ஏற்றுமதி செய்து பொருளாதாரத்திற்கு புத்துணர்ச்சி கொடுக்கத் திட்டமிடப்பட்டது. இந்த துறை

# தோழர் ரொபேர்ட் சுபத்திரன் 66 வது பிறந்தநாள்.



- தோழர் சுகு சிறிதரன்
(தமிழர் சமூக ஜனநாயக கட்சி)

இன்றைய எமது கால சூழ்நிலையில் 20 ஆண்டுகளுக்கு முன்னர் மறைந்த தோழர் ரொபேர்ட் சுபத்திரன் அவர்களின் வெற்றிடம் ஈடு செய்ய முடியாததாக எம்மால் உணரப்படுகிறது.

தேசிய சமூக விடுதலைக்காக தனது 20களின் போராட புறப்பட்டவர்.

தேசிய விடுதலைக்கும் சமூக விடுதலைக்குமிடையே பெரும் தடை மதில் சுவர்களை எழுப்ப முடியாது என உறுதியாக நம்பியவர்.

தனது மாணவப் பருவத்திலிருந்து மானிட விடுதலை தேடலில் ஈடுபட்டவர்.

இடையறாத தத்துவ கலை இலக்கிய வாசிப்புடன் ஊரும் உறவும் நட்பும் என அமர்க்களமாக வாழ்ந்தவர்.

தென்மராட்சியின் மண் வாசனை பேச்சு மொழி, கவித்துவம், நகைச்சுவை உணர்வு தர்க்கபூர்வமான சிந்தனை என வாழ்ந்தவர்.

தேசிய சமூக அரசியல் பயணத்தை அவர் ஈழ மாணவர் பொது மன்றத்தின் ஊடாக ஆரம்பித்தபோது இயக்கவியல்-வரலாற்று பொருள் முதல் வாதத்தை அவர் கருத்தூன்றி கற்க முயன்றவர்.

மானிட விடுதலைக்கான இயக்கப் பிரவேசத்திற்கு முன்னரே அக்டோபர் புரட்சி வெற்றி பற்றி அவரின் பதின்ம வயதில் அறிந்திருந்தார்.

ஈழ மக்கள் புரட்சிகர அரசியலில் அவர் தீவிர நடைமுறை செயற்பாட்டாளராக இருந்தார். தனது நண்பர்கள் உறவுகளை தோழர்களாக மாற்றினார். சமூக நீதிக்கான போராட்டப் பாரம்பரியங்களில் வந்தவர்களை வாலிபர்கள் பெண்கள் தொழிலாளர்களை அணிதிரட்டுவதில் அவர் துரிதமான செயற்பாட்டளராக காணப்பட்டார்.

தேசிய சமூக விடுதலைக்கான புரட்சி படை அணி ஒன்றை எழுப்புவதில் அவர் முன்னோடி செயற்பாட்டாளர்.

சாதாரண மக்கள் மீது விசுவாசம் கொண்ட அணியை கட்டி எழுப்புவதில் காத்திரமான பங்கை வகித்தவர்.

வடக்கு கிழக்கு மலையகம் தென்னிலங்கை உலகமென அவரது பார்வை விசாலமானது.

சமூகத்தில் ஊறிவிட்ட கரடு தட்டி போன பிற்போக்குத்தனங்களை அதிகார அகங்காரங்களை மூட நம்பிக்கைகளை அவர் சமரசம் இன்றி நிராகரித்தார்.

போராட புறப்பட்ட இளம் மனிதர்களுக்கு அவர் இறுதி மூச்சு வரை விசுவாசமாக இருந்தார்.

உலக நிகழ்வுகள், நாட்டு நடப்புகள், கலை இலக்கியம், அரங்காற்றுகை புதிய அலை இயக்க சினிமா என எல்லாவற்றிலும் தனது ஈடுபாட்டை செலுத்தினர்.

அரசின் வதை முகாம்களிலும் சிறையிலும் அவர் சக இயக்கத் தோழர்கள் போராளிகளுடன் ஆழ்ந்த நட்பையும் தோழமையையும் பேணினார்.

கொடிய சித்திரவதை -பாரமான இரும்பு சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு இருந்த போதும் தேசிய சமூக விடுதலை தீ அவர் இதயத்தில் குடி கொண்டிருந்தது.

1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் சிறையில் இருந்து விடுதலையான பின்னரும் சிறைத் தோழர்களுடன் தோழமை நட்பு பாதுகாப்பாக அவர்கள் வீடு திரும்ப வேண்டும் என்று கருதி அனைத்து சிறை மீண்ட போராளிகளின் நலன்களையும் தன்னால் இயன்றவரை பேணினார்.

அவர் விடுதலையான போது 1986இல் இறுதியில் இயக்கத்தின் செயல்பாடுகள் புலிகளால் முடக்கப்பட்டிருந்தது.

இயக்கம் சின்னா பின்னப்படுத்தப்பட்டிருந்தது. அவர் மனம் தளரவில்லை. பூஜ்ஜியத்தில் இருந்து மேலெழலாம் என்ற நம்பிக்கை கொண்டவர்.

அவர் 1985 ஏப்ரல் அளவில் அரச படையினரால் யாழ் நகரத்தில் வைத்து கைது செய்யப்பட்ட போது அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்து குருநகரை சேர்ந்த போல்டன் குமார் அவர்கள் அரசு படையினரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் மாகாண சபை முறையை பலப்படுத்தும் செயற்பாட்டின் போது 1988 இல் புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் அவர் காயமடைந்தபோதும் அயரவில்லை.

தமிழகத்தில் புலம்பெயர்ந்திருந்த 1990 களின் முற்பகுதியில் தமிழக முற்போக்கு ஜனநாயக அரசியல் சக்திகளுடனும் கலை இலக்கிய செயற்பாட்டாளர்களுடனும் தனது பரிச்சயத்தை அதிகரித்துக் கொண்டார்.

1990களின் முற்பகுதியில் இலங்கை திரும்பிய தோழர் ரொபேர்ட் வடக்கு கிழக்கில் கொழும்பில் சமூக அரசியல் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிக்க முயன்றார்.

1990களின் நடுப்பகுதிக்கும் பின்னர் யாழ் குடாநாட்டில் ஒரு ஜனநாயக இடைவெளியை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஆரம்பித்தார்.

அரசியல் இயக்கங்கள், கட்சிகள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கங்கள், வாசிக சாலைகள், மாதர் அமைப்புகள், சமூக நீதிக்கான இயக்கங்கள், இதர சமூக செயற்பாட்டாளர்கள் என பலருடனும் உறவை பேணினார்.

யாழ் மாநகர சபை உறுப்பினராக இருந்து கொண்டு அதனை ஒரு ஜனநாயக செயற்பாட்டு கருமையமாக செயல்படுத்துவதற்கு சக இயக்கத்தினருடன் இணைந்து அவர் பாடுபட்டார்.

இயலுமானவரை சமூகத்திற்கும் அதன் பயன் கிடைக்க கூடியவாறு மாநகர சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளில் அங்கத்துவம் வகித்த தோழர்களுக்கு வழி காட்டினர்.

எமது சமூகத்தில் வாராது வந்துற்ற அசாதாரண ஆளுமை.

சகோதர படுகொலையில் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் மாநகர- நகர சபை முதல்வர்கள் கொல்லப்பட்ட போதும் அவர்களை கண்ணியப்படுத்தும் விதமாக அஞ்சலி நிகழ்வுகளை முன் நின்று நிகழ்த்தினார்.

மிகக் கடினமான சிரமமான காலத்தில் வடக்கு கிழக்கு எங்கும் தோழர்களை அணிதிரட்டி ஸ்தாபன புனர் நிர்மாணத்திற்கு தன்னை அர்ப்பணித்தார்.

அவரது ஆளுமை படுகொலைவாதிகளை திகைப்படைய வைத்தது.

2003ஜுலை 14ஆம் தேதி அவர் யாழ் காரியாலயத்தின் மொட்டை மாடியில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது சினைப்பர் தாக்குதலில் அவர் படுகொலை செய்யப்பட்டார் .

தனது 20களில் போராட புறப்பட்ட தோழர் தனது 46 வது வயதில் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது பயணம் இலட்சிய உறுதியையும் சமூக விடுதலையை சகோதரத்துவம் ஐக்கியத்தை வலியுறுத்தி நிற்கிறது.

தோழர் ரொபேர்ட் போன்று மறைந்த பல்லாயிரம் தோழர்கள் போராளிகள் பொதுமக்களின் சமூக கனவுகள் மெய்ப்பட வேண்டும்.

அவரது தாயார் 1990களில் புலிகளால் உடுத்த துணியுடன் தமிழகத்துக்கு படகு மூலம் வேறு பலருடன் நாடு கடத்தப்பட்டார். பின்னர் அவர் கனடா நாட்டிற்குச் சென்று புத்திர சோகத்துடன் மறைந்தார். அவருடைய தந்தையார் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்.

தான்பிறந்தது இயேசு பாலன் பிறந்த நாளாக்கும் என்று பெருமிதம் பொங்க கூறுவர் .

இன்று அவரது 66 ஆவது பிறந்த நாள்.

# உலகின் குப்பைத் தொட்டியா...

முகம் தென்னமெரிக்காவில் அமைந்திருக்கும் மிகப்பெரிய டியூட்டி ஃப்ரீ துறைமுகம். அந்த நாட்டு மக்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களின் துணிகள் அங்கு வந்து சேர்ந்தன. ஆனால் நினைத்தது ஒன்று. நடந்தது வேறொன்று.

லட்சக்கணக்கான டன் பயன்படுத்தப்பட்ட, கைவிடப்பட்ட துணிவகைகள் துறைமுகத்தின் வழியாக உள்ளே நுழைந்தது. கடந்த 2022ல் மட்டும் நான்கரை கோடி டன் துணிகள் இங்கு வந்தன. ஆனால் வருவதில் பெரும்பகுதியும் பின்னர் ஒருமுறை கூட பயன்படுத்த முடியாத துணிகளே. நம் ஊர் குப்பைக் கிடங்குகளில் பயன்படக்கூடிய பொருட்களைப் தேடும் மனிதர்கள் போல நல்ல துணிமணிகள் ஏதேனும் உள்ளனவா என்று தேடும் மனிதர்களை இங்கு சர்வசாதாரணமாகக் காணலாம்.

**தரம் பிரிக்கப்படும் பாழான துணிகள்**

இறக்குமதி செய்யப்படுபவற்றைத் தரம் பிரித்து ஏற்றுமதி செய்வதே இதற்கான திட்டத்தைக் கொண்டு வந்தபோது இருந்த நோக்கம். இதனுடன் தொடர்புடைய தொழிற்பிரிவுகள் இங்கு ஏராளமாக செயல்படுகின்றன. இத்தகைய 2000 பிரிவுகளில் பாதிக்கும் மேற்பட்டவை வெளிநாட்டு உரிமையாளர்களின் கைவசம் உள்ளவை. அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் இருந்து வரும் துணிகளை ஊழியர்கள் அவற்றின் தரத்திற்கேற்ப வகைப்படுத்துகின்றனர்.



இவற்றில் சிறந்தவை ஏற்றுமதி செய்யப்படுகிறது. தரமற்றவற்றை டிரக் டிரைவர்கள் நகரப் பகுதிகளுக்கு கொண்டு செல்கின்றனர். அவை அங்கு மறுபடி தரம் பிரிக்கப்பட்டு உள்ளூர் கடைகளில் விற்கப்படுகின்றன. ல வெஃப்ராடில்லா என்ற ஒரு கடைத்தெருவில் இத்தகைய துணிகளை விற்கும் ஏழாயிரம் கடைகள் உள்ளன. கடைகளில் விற்கப்பட முடியாதவை நேராக பாலைவன பூமியில் கொண்டு போய் மலை போல கொட்டப்பட்டு குவிக்கப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்படுபவற்றில் பெரும்பகுதி ஒருவிதத்திலும் பயன்படுத்த முடியாதவை. செயற்கை நூலிழைகளால் உருவாக்கப்பட்ட துணிவகைகள் ஒருபோதும் மக்காமல் ஆண்டுகள் கணக்கில் கொட்டப்பட்ட இடங்களிலேயே கிடக்கின்றன. இந்த பாழ் துணி மலைகள் அளவில் பெரிதாகும்போது எரிக்கப்படுவதும் உண்டு. பாலியெஸ்ட்டர் போன்ற பிளாஸ்டிக் நாரிழைகளால் ஆன துணிகள் அணையாமல் தொடர்ந்து எரியும்.

**அழிவில் இருந்து மீட்கப்படுமா இந்த அழகு பாலைவனம்?**

கடுமையான நச்சவாயுப் புகை காற்று மண்டலத்தில் நிறையும். குப்பை போடுபவர்களுக்கு சிலி அரசாங்கம் அபராதம் மற்றும் கடுமையான கட்டுப்பாடுகளை கொண்டு வந்த போதும் அந்தப் பட்டியலில் தூக்கியெறியப்படும் துணிகள் சேர்க்கப்படவில்லை. புதிய சட்டதிட்டங்கள் கொண்டு வரப்பட்டால் மட்டுமே அட்டகாமா என்ற இந்த அழகு பூமி அழியாமல் பாதுகாக்கப்படும். ●